தினக்குரல்
யாழ்
தினக்குரல்
THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com

ஓசை : 020 குரல் : 263 வியாழக்கிழமை 02 டிசம்பர் Thursday 02nd December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/- பக்கங்கள் : 12


## அரசாங்கத்துடன் ரணில் இணைகிறாரா ?

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்துடன் இணையும் எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு நெருங்கிய தரப்புக்கள் இதனை தெரிவித்துள்ளன.

எதிர்வரும் டிசம்பர் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதி பக்கம் 02

## கிளிநொச்சியில் இளம் குடும்பஸ்தர் கொலை

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பக்கம் 02

# சிலிண்டர்களை மீளப் பெறுங்கள்

-அவசர ஆலோசனை உப குழுக் கூட்டத்தில் எதிர்க்கட்சியினர் வலியுறுத்து

-கலவை அளவு மாற்றமே வெடிப்புகளுக்கு காரணம் என குற்றச்சாட்டு

- முடிவின்றி கூட்டம் முடிவு

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

சமையல் எரிவாயுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அவசர ஆலோசனை உப குழு கூடி ஆராய்ந்துள்ள நிலையில், தரமற்ற வகையில் ஆபத்தான எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டிருந்தால் அவற்றை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு எதிர்க்கட்சியினர் வலியுறுத்தியுள்ளனர். பக்கம் 02



# இதுவரை 63 சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள்

-கொழும்பு மாநகரினுள் குறைவு-

க.பிரசன்னா

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறும் எரிவாயு கசிவின் மூலமாக 63 வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 15 பேர் காயமடைந்துள்ளதுடன் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களின் மூலமே சகல வெடிப்புச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள 63 வெடிப்புச் சம்பவங்களில் கொழும்பு மாவட்டத்தில் இரண்டு சம்பவங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் கொழும்பு மாநகரசபைக் குட்பட்ட பகுதியில் ஒரு சம்பவமும் ஹங்வெல்ல பகுதியில் ஒரு சம்பவமும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முதலாம் திகதியும் நாட்டில் பல வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பக்கம் 02






## அராலியில் இரண்டு வீடுகளில் காஸ் அடுப்பு வெடித்து சிதறியது

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி கிழக்கு ஜே/163 கிராம சேவகர் பிரிவில் உள்ள இரண்டு வீடுகளில் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியது.

கடந்த 28ஆம் திகதி ஒரு வீட்டிலும் 29ஆம் திகதி மற்றைய வீட்டிலும் இவ்வாறு வெடிப்புச் சம்பவம் பக்கம் 02




## மின் தடை ஏற்பட்டால் திருத்த வேலை இல்லை

'சட்டப்படி வேலை' ஆரம்பம்

க.பிரசன்னா

யுகதனவி மின் நிலையத்தின் எரிவாயு விநியோக உரிமையை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்குவதை இரத்துச் செய்தல் உட்பட ஆறு கோரிக்கைகளை பக்கம் 02





## வடக்கில் கொவிட் தொற்று; நோயாளர் தொகை உயர்வு

வடக்கு மாகாணத்தில் ஒக்டோபர் மாதத்தை விட நவம்பர் மாதத்தில் கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் ஒக்டோபர் மாதத்தில் 2 ஆயிரத்து 661 பேர் கோவிட்-19 நோய்த்தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். நவம்பர் மாதத்தில் 3 ஆயிரத்து 49 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஒக்டோபர் மாதத்தில் கொவிட்-19 நோயினால் 71 பேர் உயிரிழந்தனர். நவம்பர் மாதத்தில் இது 49 ஆகக் குறைவடைந்துள்ளது. பக்கம் 02



## எரிபொருள் விலையும் விரைவில் அதிகரிப்பு

-10 மாதங்களில் 7000 கோடி ரூபா நட்டமாம் -

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

எரிபொருள் விலையில் மாற்றம் மேற்கொள்ளாத காரணத்தினால் கடந்த 10 மாதங்களில் மாத்திரம் 7000 கோடி ரூபா நட்டத்தை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாகவும் அதனைக் பக்கம் 02



## யாழில் காணி ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு; ஆளுநர் அலுவலகம் முன் போராட்டம்

-ஆளுநருடனான சந்திப்பு இரத்தானதால் குழப்பம் -

மாதகலில் கடற்படையினருக்காக காணி அளவீடு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக போராட்டம் இடம்பெற்றது.

நேற்று மதியம் ஒரு மணியளவில் பக்கம் 02



## கிளிநொச்சி காணிகளை மக்களிடம் கையளிக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொருத்தமான காணிகள் அனைத்திலும் பிரதேச மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களில் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட காணிகளில் ஒரு பகுதியும், பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான ஒரு பகுதி காணிகளிலும் விவசாய நடவடிக்கை மேற்கொள்ள முடியாமை தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்களை தொடர்ந்து பக்கம் 02

## புலிகளின் தங்கம் தேடிய அமைச்சு உயர் அதிகாரிகள்

சரத் வீரசேகரவின் ஒருங்கிணைப்பு செயலாளர் இடைநிறுத்தம்

பொது பாதுகாப்பு அமைச்சின் ஒருங்கிணைப்பு செயலாளர், உடன் அமுலுக்கு வரும் வகையில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டு இதனை குறிப்பிட்டுள்ளது.

ஒருங்கிணைப்பு செயலாளர் தொடர்பில் பல்வேறு ஊடகங்கள் வாயிலாக வெளியான செய்திகள் தொடர்பில் பக்கம் 02

## சபுகஸ்கந்த இந்தியாவுக்கா ? பசில் சென்றது அதற்காகவா ?

- ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்காகவா நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச இந்தியாவுக்கு சென்றுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. யான சமிந்த விஜயஸ்ரீ கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போதே இடையீட்டு கேள்வியாக இந்தக்கேள்வியை எழுப்பிய சமிந்த விஜயஸ்ரீ எம்.பி மேலும் கூறுகையில்,

சமையல் எரிவாயு தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அந்த நிறுவனத்தை வேறு எவருக்காவது வழங்குவதற்கே தற்போது சமையல் எரிவாயு பக்கம் 02

## இந்திய நிதியமைச்சரை சந்தித்தார் பசில்



இந்தியாவுடனான பொருளாதார உறவுகளை மேலும் ஆராய்வதற்காக வழிவகைகள் குறித்து இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிதியமைச்சர் பசில் ராஜபக்ச ஆராய்ந்துள்ளார்.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை பசில் ராஜபக்ச நேற்று சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். பக்கம் 05




## மின் தடை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்து சட்டப்படி வேலை தொழிற்சங்க நடவடிக்கையின் இரண்டாம் பகுதி நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

முன்னதாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சட்டப்படி வேலை தொழிற்சங்க நடவடிக்கையானது நவம்பர் 25 ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நேற்று பிற்பகல் 4.30 மணிக்குப் பின்னர் எவ்விதமான மேலதிக மின்சார மறுசீரமைப்பு பணிகளையும் முன்னெடுக்கமாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டப்படி 8 மணித்தியால வேலை மாத்திரம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யுகதனவி மின் நிலையத்தின் எரிவாயு விநியோக உரிமையை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்குவதை இரத்துச் செய்தல், இலங்கை மின்சார சபையின் எல்.என்.ஜி. தொழில்வாய்ப்புக்கான திறந்த டெண்டர் முறையினை தொடருதல், இலங்கை மின்சார சபைக்கெதிரான கட்டவிழ்ப்பை நிறுத்தல், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சட்ட முன்மொழிவுகளை நிறுத்துதல், இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் பதவி நியமனத்தை அரசியல்மயமாக்குவதை நிறுத்துதல் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவ பணியாளர்களை இடமாற்றுவதை நிறுத்துதல் ஆகிய ஆறு கோரிக்கைகளை முன்வைத்தே இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தினால் சட்டப்படி வேலை தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவனத்தில் கொண்டு எரிபொருள் விலையில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 52 ஆண்டுகள் பழைமையானது. அதனை எவருக்கும் விற்பனை செய்வதற்கு இதுவரை எந்த தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. உலகில் வளர்ச்சியடைந்துள்ள தற்போதைய தொழிநுட்பத்துடன் ஒப்பிடும் போது இது 52 ஆண்டுகள் பழைமையான தொழிநுட்ப முறைமையுடன் இயங்குகின்ற நிறுவனமாகும். அதனைக் கொண்டு நடத்துவதே மிகவும் கடினமாக உள்ளது. ஆகவே சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை விற்கும் எந்த நோக்கமும் எமக்கு கிடையாது.

50 நாட்களுக்கு இந்த நிலையத்தை மூடவே தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அதற்குள் மீண்டும் அதனை இயல்பு நிலைக்கு கொண்டு வர முயற்சிக்கின்றோம்.

அதேபோல் எரிபொருள் விலையில் மாற்றங்களை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் நாம் தற்போது உள்ளோம், கடந்த காலத்தில் இதில் மாற்றங்களை செய்யாத காரணத்தினால் கடந்த இறுதி பத்து மாதங்களில் மாத்திரம் 7000 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

எனவே விலை மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லது திறைசேரியின் மூலமாக நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அது தொடர்பில் நிதியமைச்சரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளோம். எவ்வாறெனினும் கடந்த ஆறு மாதங்களில் எரிபொருள் விலையில் மாற்றம் மேற்கொள்ளாத உலகின் ஒரே நாடு இலங்கை என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன் என்றார்.

## இதுவரை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி - குண்டசாலை, நத்தரம்பொத்த பிரதேசத்திலுள்ள வீடொன்றில் அதிகாலை 3 மணியளவில் எரிவாயு வெடித்ததில் பெண்ணொருவர் பலத்த காயமடைந்துள்ளார். தலவாக்கலை வோக்கர்ஸ் பகுதியில் அமைந்துள்ள மேல்கொத்மலை வீட்டுத்திட்டத்தில் எரிவாயு வெடிப்புச் சம்பவம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பலதொட்ட தேக்கவத்தை பகுதியில் எரிவாயு வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பு திராய்மடு சுவிஸ் கிராமம் பகுதியில் எரிவாயு வெடிப்புச்சம்பவம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நவம்பர் 30 ஆம் திகதி நாடு முழுவதும் எரிவாயுடன் தொடர்புடைய 34 வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஹட்டன் மல்லியப்பூ, ஜா-எல, மாரவில, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஹங்வெல்ல, பாதுக்க, எம்பிலிபிட்டிய, மாவனல்லை, மீகொட, அத்துருகிரிய, அம்பலாந்தொட்டை, கொள்ளுப்பிட்டி, கெக்கிராவ மற்றும் மாத்தறை உள்ளிட்ட பல பகுதிகளில் இவ்வெடிப்பு சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த நவம்பர் 29 ஆம் திகதி நாட்டில் 16 வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. கடந்த நவம்பர் 4 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 28 ஆம் திகதி வரை மொத்தமாக ஒன்பது வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வெலிகம-கபரதொட்ட, பொலனறுவை - வெலிகந்த, இரத்தினபுரி, கொழும்பு 7 குதிரைப்பந்தயத்திடல், பன்னிப்பிட்டிய - கொட்டாவ, சாய்ந்தமருது, யாழ்ப்பாணம் - கந்தரோடை மற்றும் கேகாலை - கஹட்டபிட்டி, நிக்கவரெட்டிய - கந்தேகெதர ஆகிய பகுதிகளில்; இச்சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டன.

அங்கீகரிக்கப்படாத எரிவாயு கலவையின் காரணமாகவே நாடு முழுவதும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனினும் குறித்த குற்றச்சாட்டுக்களை தொடர்ச்சியாக எரிவாயு நிறுவனங்கள் புறக்கணித்து வருகின்றன.

## கிளிநொச்சியில் இளம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நண்பர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிய நிலையில் தடியால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த குடும்பஸ்தர் நோயாளர் காவு வண்டிமூலம் கிளிநொச்சி வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று புதன்கிழமை அவா் உயிரிழந்தார்.

இராமையா இராமஜெயம் எனும் ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(ச-55)

## யாழில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற இந்த போராட்டத்தில் மாதகல் காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டு காணி அளவீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். நிலத்தை பறிப்பதும் எம் உயிரைப் பறிப்பதும் ஒன்றே, எமது நிலம் எமக்கு வேண்டும்,காணிகளை சுவீகரிக்காதே, ஆளுநரே காணி அபகரிப்புக்கு உடந்தையாகாதே போன்ற பல்வேறு கோஷங்கள் போராட்டக்காரர்களால் எழுப்பப்பட்டது. போராட்டம் இடம்பெற்ற அப்பகுதியில் பொலிசாரும் இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை, வடக்கு மாகாண ஆளுநருடன் மாதகல் காணி உரிமையாளர்கள் சந்திப்பதற்கு நேற்று ஏற்பாடுகள் இடம்பெற்று இருப்பதாக தெரிவிக்கப்பட்ட போதும் திடீரென அந்த சந்திப்பு இரத்து செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதால் ஆளுநர் அலுவலகம் முன்பு குழப்பமான நிலை ஏற்பட்டது.

நேற்று மதியம் 2 மணிக்கு வடமாகாண ஆளுநர் காணி உரிமையாளர்களை சந்திக்கவிருப்பதாக வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகத்தால் காணி உரிமையாளர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் திடீரென அந்த சந்திப்பு இரத்து செய்யப்பட்டதாகவும் வியாழக்கிழமை (இன்று ) காலை 8 மணிக்கு அந்த சந்திப்பு நடைபெறும் எனவும் ஒரு சில காணி உரிமையாளர்களுக்கு பிரதேசசெயலகத்தால் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேரடியாக சென்று காணி உரிமையாளர்கள் கேட்டபொழுது இந்த சந்திப்பு தொடர்பில் தமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என தெரிவித்தனர். இதனால் ஆளுநரை சந்திக்க தூர இடங்களில் இருந்து வந்தவா்கள் உட்பட பலர் அலைக்கழிக்கப்பட்டதாக அங்கிருந்த மக்கள் கவலை தெரிவித்தனர். (40)

## அராலியில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒரு வீட்டினரால் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே எரிவாயு அடுப்பு இவ்வாறு வெடித்துச் சிதறியதாகவும் எனினும் எவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என சம்பவம் நிகழ்ந்த வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ச-40,75)

## சிலிண்டர்களை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன ஆகியோர் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில் வர்த்தக அமைச்சு, கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு, திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு, இலங்கை பொலிஸ், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை, அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம், லிட்ரோ எரிவாயு நிறுவனம், லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம், இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனம், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டுக்கான தராதர அங்கீகார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எரிசக்தி அமைச்சு மற்றும் அரச பகுப்பாய்வுத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இது தவிரவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டபிள்யூ.டி.டபிள்யூ.ஜயதிலக மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பேராசிரியர்.ஷாந்த வல்பொலகே, பெற்றோலியத்துறை நிபுணர் நிமல்.டி.சில்வா ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்கெடுத்திருந்தனர். இதேவேளை இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படும் வெடிப்புச் சம்பவங்கள் குறித்து அனைத்துத் தரப்பினரினதும் கருத்துக்களும் பெறப்பட்டன.

எரிவாயு சிலிண்டர்களின் கலவையில் ஏற்பட்ட மாற்றத்தினால் வெடிப்புக்கள் ஏற்படுகின்றனவா என்பது தொடர்பிலும், உயர் தரத்திலான கருவிகளைப் பயன்படுத்துவதன் அவசியம், எரிவாயு கசிவின் போது ஏற்படக்கூடிய நாற்றம் குறித்து பரிசீலனை செய்து அறிக்கைகளைப் பெற்று அவற்றை சந்தைக்கு விநியோகித்தல், ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் பெற்றுக் கொண்டு அதில் உள்ள பரிந்துரைகளை விரைவில் நடைமுறைப்படுத்துவது, இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்படும் எரிவாயு நாட்டுக்குள் கொண்டுவரப்பட முன்னர் பரிசோதனைக்கு உட்படுத்தல் போன்ற விடயங்கள் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. இவ்வேளையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பல்வேறு கேள்விகளை முன்வைத்திருந்ததுடன், எழுத்துமூலம் அவற்றுக்குப் பதில் வழங்குமாறும் கோரிக்கைவிடுத்தார்.

இதன்போது அண்மைக் காலமாக பதிவாகி வரும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இவ்வேளையில் எரிவாயு சிலிண்டரில் கலவை அளவு மாற்றத்தினால் இவ்வாறான சம்பவங்கள் நடக்கலாம் பெரும்பாலானவர்கள் தமது நிலைப்பாட்டை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை செவ்வாய்க் கிழமையில் மாத்திரம் நாடு முழுவதும் இதனுடன் தொடர்புடைய 34 வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், அதில் சிலர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸ் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார். அத்துடன் இத்தகைய பிரச்சினை நிலைமையில் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள சிலிண்டர்களை மீளப் பெற்றுக்கொண்டால் நல்லது என்றும் எதிர்க்கட்சித் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எரிவாயு நிறுவனங்கள் சார்பில் கலந்துகொண்டவர்கள் உள்ளிட்ட சிலர், சிலிண்டரில் பொருத்தப்படும் ரெகுலேட்டர் மற்றும் குழாயில் உள்ள பிரச்சினையால் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படலாம் என்றும் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்தக் கூட்டத்தில் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் எவ்வாறு நடக்கின்றது என்று இறுதி முடிவுக்கு வரவில்லை. இது தொடர்பில் ஆய்வுகள் நடைபெற்று வருவதால் அதன்பின்னரே இறுதி நிலைப்பாட்டுக்கு வர முடியுமென்றும் அதிகாரிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

## அரசாங்கத்துடன் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை டுபாயில் நடைபெறவுள்ள இந்து சமுத்திர மாநாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுடன், ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளதாக வெளியான தகவலை அடுத்தே, அவர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளப்போவதாக ஊகங்கள் எழுந்திருந்தன.

எனினும் இதனை ஐக்கிய தேசியக்கட்சி மறுத்துள்ளது.

டுபாயில் நடைபெறவுள்ள குறித்த மாநாட்டில் பங்கேற்குமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கட்சித் தரப்புகள் தெரிவித்துள்ளன.

2016ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இந்து சமுத்திர மாநாட்டுக்கான தலைவர் பதவியை ரணில் விக்கிரமசிங்க வகித்து வந்தார்.

இதன் அடிப்படையிலே அவர் டிசம்பர் 5ஆம் திகதி டுபாய் மாநாட்டில் உரையாற்றவுள்ளதாக கட்சி தரப்புகள் குறிப்பிட்டுள்ளன.

இந்த மாநாட்டில் இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், சிங்கப்பூரின் வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

## வடக்கில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நவம்பர் மாதத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகப்படியாக 842 பேர் கோவிட்-19 தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அடுத்தபடியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 825 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் முறையே 713, 540, 129 பேர் நவம்பர் மாதத்தில் கோவிட்-19 நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், யாழ்ப்பபாணம் மாவட்டத்தில் 30 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 8 பேரும் வவுனியா மன்னார் மாவட்டங்களில் தலா 5 பேரும் முல்லைத்தீவில் ஒருவரும் என 49 பேர் கோவிட்-19 நோயினால் நவம்பர் மாதத்தில் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் 2020 மார்ச் தொடக்கம் இதுவரை வடக்கு மாகாணத்தில் 41 ஆயிரத்து 952 பேர் கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 890 பேர் உயிரிழந்துள்ளனர். (ச-40)

## சப்புகஸ்கந்த ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான பிரச்சினைகள் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் தற்போது மூடப்பட்டுள்ளது . சிறிது காலம் சென்றதன் பின்னர் இந்த நிலையம் பழுதடைந்துவிட்டது. இதில் பிரச்சினைகள் காணப்படுவதால் அதனை நடத்திச் செல்ல முடியாது என தெரிவித்து, சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் இந்தியாவுக்கு வழங்கப்படலாம் .

தற்போது நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தற்போது இந்தியாவுக்கு சென்றுள்ளார். சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்காகவா பசில் ராஜபக்ச இந்தியாவுக்கு சென்றுள்ளார்? எனக்கேட்டார். இதற்கு வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில பதிலளிக்கையில், 52 வருடங்கள் பழமையான சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை விற்பனை செய்யும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை. 52 வருடங்கள் பழமையான இந்த நிலையத்தை எவரும் வாங்குவார்களா? என்றும் தெரியாது.எனவே இதனை விரைவாக திறப்பதற்கே அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றார்.

## கிளிநொச்சி காணிகளை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியினால் குறித்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், எதிர்வரும் வாரங்களில் சுமார் 2119 ஏக்கர் காணிகள் விவசாய நடவடிக்கைகளுக்காகவும், 850 ஏக்கர் காணிகள் மேய்ச்சல் தரைக்காகவும் கையளிக்கப்படவுள்ளது.

கடந்த கால யுத்த சூழல் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல்லாயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் மேய்ச்சல் தரைகளும் கைவிடப்பட்டன.

இந்நிலையில், வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு தொடர்பான திணைக்களங்களினால் கணிசமானளவு விவசாய நிலங்களும் மேய்ச்சல் தரைகளும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. இதனால் பிரதேச மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டதுடன் நாட்டிற்கு பொருளாதார நன்மைகளை ஏற்படுத்தக் கூடிய விவசாய நடவடிக்கைகளிலும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி, துறைசார் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை மேற்கொண்ட நிலையில், ஜனாதிபதியினால் மேற்குறித்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஜனாதிபதி மற்றும் துறைசார் அமைச்சர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில், கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 1299 ஏக்கர் காணிகளும் கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் 280 ஏக்கர் காணிகளும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் 453 ஏக்கர் காணிகளும் பூநகரி பிரதேசத்தில் 87 ஏக்கர் காணிகளும் வன வளம் மற்றும் வனஜீவராசிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பொருத்தமான காணிகளாக அடையாளப்பட்டிருந்தது. அதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தினை சேர்ந்த சுமார் 850 ஏக்கர் காணிகள் மேய்ச்சல் தரைக்குப் பொருத்தமானது எனவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-55,75)

## புலிகளின் தங்கம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் கோரியுள்ளதாக குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தக் காலத்தில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டதாக கூறப்படும் ஒரு தொகை தங்கத்தை இரகசியமாக தோண்டி எடுக்க முயற்சித்த அமைச்சரவை அமைச்சர்கள் இருவரின் தனிப்பட்ட பணிக்குழுவை சேர்ந்த செயலாளர்கள் தொடர்பில் பொலிஸாரினால் விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் இருவரும் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் மற்றும் கடற்றொழில் அமைச்சின் ஒருங்கிணைப்பு செயலாளர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மெல்ல மெல்ல விழுங்கப்படுகிறது மணலாறு-சூரியனாறு பிரதேசம்

## -மகாவலி அபகரிப்பு தொடர்கிறது-ரவிகரன்

தமிழர்களின் பூர்வீக பகுதியான மணலாறு, மெல்ல மெல்ல ஆக்கிரமிப்பாளர்களினால் விழுங்கப்படுவதாக முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் மணலாறு - சூரியனாறு பகுதியிலுள்ள தமிழர்களின் பூர்வீக காணிகளை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஆக்கிரமித்து அப்பகுதிக்கு கலம்பவெள எனப் பெயரிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் தற்போது சூரியனாறு பகுதியிலுள்ள தமிழ் மக்களின் ஏனைய காணிகளையும் அபகரிப்பதற்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை முனைப்புக்காட்டி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது தமிழர்களின் வரலாற்றுப் பூமியான மணலாறு மெல்ல மெல்ல ஆக்கிரமிப்பாளர்களால் விழுங்கப்படுகின்றது. மணலாற்றில் ஏற்கனவே வெலிஓயா என்ற பிரிவு உருவாக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்தோடு இணைக்கப்பட்டது அனைவரும் அறிந்தவிடயம். குறிப்பாக அனுராதபுர மாவட்டத்தின் ஒரு பகுதியையும்,திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பகுதியையும்,வவுனியா வடக்கின் ஒரு பகுதியையும், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்தின் வளமான பூர்வீக மணலாற்றுப் பூமிகளையும் உள்ளடக்கி வெலிஓயா உருவாக்கப்பட்டது. இவ்வாறாக உருவாக்கப்பட்ட வெலிஓயாவின் மொத்த நிலப்



பரப்பு இருபத்தெட்டாயிரத்துத் தொள்ளாயிரம் (28,900) ஏக்கர் என அறியக்கூடியதாக இருக்கின்றது.

ஒன்பது கிராம அலுவலர் பிரிவுடன் இந்த வெலி ஓயா பிரதேசம் உருவாக்கப்பட்டிருப்பதோடு மாத்திரமின்றி, முல்லைத்தீவு மாவட்டத்துடன் இந்த வெலிஓயா பகுதி இணைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் கலம்பவெள எனப் பெயரிட்டு சூரியனாற்றுப் பகுதியிலுள்ள தமிழர்களின் பூர்வீக காணிகளை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை அபகரித்திருந்தது.

அவ்வாறு அபகரிக்கப்பட்ட காணிகளுக்கு மேலதிகமாக, சூரியனாற்றுப் பகுதியிலுள்ள தமிழர்களின் காணிகளை அபகரிப்பதற்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை முயற்சி எடுப்பதாக தெரிகின்றது. குறிப்பாக ஏற்கனவே கடந்த 1970 ஆம் ஆண்டில் 190 பயனாளிகளுக்கு 10 ஏக்கர் வீதம் வழங்கப்பட்டிருந்த காணிகளையே தற்போது வெலிஓயா பகுதியுடன் இணைக்கும் நோக்குடன் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை முனைப்புக்காட்டிவருவதை அவதானிக்கக்கூடியதாகவிருக்கின்றது என்றார்.

(56)

# இந்தியா இழுவைப்படகுக்கு எதிராக 10000 கையெழுத்து வேட்டை ஆரம்பம்



தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் ஆகியோர்களின் ஏற்பாட்டில் இந்திய இழுவைப்படகுக்கு எதிராக 10000 கையெழுத்து சேகரித்து ஜனாதிபதி, சட்டமா அதிபர் கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு கையளிக்கும் முகமாக கையெழுத்து சேகரிக்கும் பணிகள் நேற்றையதினம் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி நாச்சிக்குடா சந்தி மற்றும் இரணைமாதா நகர், கடற்கரை, போன்றவற்றில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மீனவர்கள், மக்கள் என பலர் கையெழுத்து இட்டமை குறிப்பிடத்தக்கவிடயம்.இதே போன்று மன்னார் ,முல்லைத்தீவு , யாழ்ப்பாண மாவட்டங்களில் கையெழுத்து பெற்று எதிர்வரும் நான்காம் திகதி மனித உரிமை தினத்தில் உயர் நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது. (52)

# அவுஸ்ரேலிய தூதுவர் டேவிட் ஹொலி உணவு பதனிடும் நிலையத்துக்கு விஜயம்



இலங்கைக்கான அவுஸ்ரேலிய தூதுவர் டேவிட் ஹொலி நேற்றையதினம் கிளிநொச்சிக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முழங்காவில் இரணைமாதா நகரில் உள்ள இரணைமாதா நகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் TAP ROBANE SEA FOODS தனியார் நிறுவனம் இணைந்து மேற்கொள்ளும் கடல் உணவுகள் பதனிடும் நிலையத்தினை பார்வையிட்டார்.

குறித்த நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது இரணைமாதா நகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். (52)

# வடக்கு மக்களுடன் ஆழமான உறவைப் பேண விரும்புகிறோம்

## - ஜெர்மன் தூதுவர் ஹோல்டர் ஸுபேட்-



வடக்கு தொழில்துறை அபிவிருத்தியில் ஏர்மேன் அரசாங்கத்தின் பங்களிப்பு தொடர்ந்து அதிகரிக்கப்படும் என இலங்கைக்கான ஜெர்மன் தூதுவர் ஹோல்டர் ஸுபேட் யாழில் தெரிவித்தார்.

நேற்றைய தினம் புதன்கிழமை சுன்னாகத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற யாழ் மாவட்ட வர்த்தக தொழில் துறை மன்றத்தின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மூன்று நாள் விஜயமாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தேன் மிகவும் பயனுள்ள விஜயமாக கருதுகிறேன்.

வடக்கு மக்களுக்கு ஜெர்மன் அரசாங்கம் தொழில்துறை சார்ந்த உதவிகளை வழங்கி வருகிற நிலையில் வடக்குடனான எமது உறவை ஆழமாக விரும்புகிறோம்.

ஜெர்மன் வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து செயற்படுவதற்காக யாழ் மாவட்ட வர்த்தக தொழில்துறை மன்றத்தை தெரிவு செய்துள்ளோம்.

ஆகவே வடக்கு மக்களுடன் ஜெர்மன் அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து உதவிகளையும் தொடர்ந்து வழங்குவதற்கு தயாராக இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான ஜெர்மன் வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதி அன்றியாஸ், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன்,அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மற்றம் யாழ் வர்த்தக தொழில் துறை மன்ற பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

(75)

# காரைநகரில் அதிபர் அறைந்ததில் மாணவனின் செவிப்பறை பாதிப்பு

யாழ். காரைநகரின் பிரபல கல்லூரி ஒன்றின் அதிபர் தாக்கியதில் க.பொ.த சாதாரண தரத்தில் பயிலும் மாணவர் ஒருவரின் ஒரு பக்கக் காதின் செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்

னெடுத்துள்ளமையுடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அறிவுறுத்தலில் ஒழுக்காற்று விசாரணையும் நடைபெறவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் தாக்கியுள்ளார். காதில் ஏற்பட்ட வலி காரணமாக மாணவன், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் மறுநாள் சனிக்கிழமை சேர்க்கப்பட்டுள்ளார்.

மருத்துவ சோதனையில் மாணவனின் ஒரு காதின் செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் விசாரணைகள் இடம்பெற்றன.

அத்துடன், சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டைப் பெற்ற யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிக்கையிட்டுள்ளனர்.

மேலும், சம்பவம் தொடர்பில் அறிந்த வடக்கு மாகாண கல்வி அமைச்சு உரிய விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கையிடுமாறு அதிகாரிகளுக்குப் பணித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாணவனை அழைத்த அதிபர் காற்சட்டை பொக்கெற்றுக்குள் கைகளை வைத்திருக் குமாறு தெரிவித்துவிட்டு 7 தடவைகள் காதுகளில் அறைந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களை அங்கங்கள் பலவீனமடையும் வகையில் தாக்குவது சித்திரவதை என்ற அடிப்படையில் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்கள் உயர் ஸ்தானிகர்கள் பிரதமருடன் சந்திப்பு



இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்களுக்கு இடையிலான சந்திப்பொன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் இரவு கொழும்பு ஷங்கிரில்லா ஹோட்டலில் நடைபெற்றது.வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸின் அழைப்பின் பேரில் இவ்விசேட சந்திப்பும் இரவு விருந்துபசாரமும் இடம்பெற்றது. இதன்போது வருகைத் தந்திருந்த தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்களுடன் பிரதமர் நட்பு ரீதியாக கலந்துரையாடினார்.

# ஆலயங்களில் திருடி சொகுசு வாழ்க்கை; சந்தேக நபர் சிக்கினார் யாழ். பொலிஸில்



ஆலயங்களில் திருடிய பணத்தில் ஒரு பகுதியை தனக்கு நகை செய்து அணிந்துகொண்ட சந்தேக நபர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் உடமையிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தங்க நகை மற்றும் ஆலயப் பொருள்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமாவில் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் கடந்த 21ஆம் திகதி 4 லட்சம் ரூபாய் பணம் மற்றும் ஆலயத்திலிருந்த பொருள்களும் திருட்டுப் போயிருந்தன.

அது தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அத்துடன், சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த 22ஆம் திகதி 20 ஆயிரம் ரூபாய் பணம் திருட்டுப் போயிருந்தது.

அதுதொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இரண்டு ஆலயங்களிலும் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளில் நாவற்குழியைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவருடன் சேர்ந்திருந்த ஒருவர் தப்பித்திருந்தார்.

சந்தேக நபர் ஆலயங்களில் திருடிய பணத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான நகையை வாங்கி அணிந்திருந்துள்ளார். அந்த நகை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் விசாரணைகளின் பின்னர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார். தங்க நகையும் சான்றுப்பொருளாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மற்றைய சந்தேக நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(40)

# 8 பேர் கைது



மதுபோதையில் வாகனத்தில் பயணித்த 8 பேரை நெல்லியடி பொலீஸார் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் நடைபெற்றது. வடமராட்சி நெல்லியடி பகுதியில் கயஸ் வாகனத்தில் அதிகாலை 3 மணியளவில் பயணித்தவர்களை நெல்லியடி சந்தியில் கடமையில் ஈடுபட்ட பொலீஸார் சோதனை செய்துள்ளனர். அதில் பயணித்தவர்கள் மது போதையில் காணப்பட்டதால் 8 பேரையும் பொலீஸார் கைது செய்துள்ளனர். 8 பேரும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், மரணச் சடங்கொன்றில் கலந்து விட்டு வீடு திரும்பும் போதே பொலீஸார் கைது செய்துள்ளதாகவும் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

(21)

# யாழில் ஜெர்மன் தூதுவருடன் வணிக சங்கம் கலந்துரையாடல்



இலங்கைக்கான ஜெர்மன் தூதுவர் ஹோல்ஸுபேடட் பங்குபற்றிய வணிக அங்கத்துவ அமைப்புகளுடனான கலந்துரையாடல் நேற்றைய தினம் புதன்கிழமை சுன்னாகத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

ஜேர்மனியின் அபிவிருத்தி ஒத்துழைப்பை பயன்படுத்தி தொழில் சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களை உருவாக்குதல் அவர்களை நாட்டின் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தல் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் யாழ்ப்பாணத்தின் பிரபல தொழில் துறை முன்னோடிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(75)

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்பிளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
வியாழக்கிழமை 02 டிசம்பர் 2021 Thursday 02nd December 2021

## எரிவாயு சிலிண்டர்களின் பாதுகாப்பான பயன்பாடு குறித்து எழுந்துள்ள அச்சம்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் அவலத்துடன் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மக்களின் கவலையை தீவிரப்படுத்திக்கொண்டிருக்கும் நிலையில் இப்போது எரிவாயு சிலிண்டர்களின் பாதுகாப்பான பயன்பாடு குறித்த பிரச்சினை யாவற்றையும் விட கடும் துன்பத்திற்குள் தள்ளிவிட்டுக்கொண்டிருக்கிறது .சில காலமாக , கொழும்பு , வெலிகம, ஹோமாகம, இரத்தினபுரி உட்பட நாட்டின் பல பகுதிகளில் வீட்டுப் பாவனைக்காக பயன்படுத்தப்படும் எல்.பி. ஜி. எரிவாயு சிலிண்டர்களிலிருந்து கசிந்த வாயுவால் தொடர் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில், கடந்த சில நாட்களாக நாட்டின் பல பாகங்களில் இவை போன்ற மேலும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவது மக்கள் மத்தியில் அச்சத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. பெரும்பாலான சம்பவங்கள் நவம்பர் மாதத்தில் பதிவாகியுள்ளன.சமையல் எரிவாயு கலவையில் ஏற்பட்ட மாற்றமே இந்த வெடிப்புகளுக்கு முக்கியமான காரணமென குற்றம் சாட்டப்பட்டாலும், எல்.பி.ஜி. வழங்குநர்கள்[தனியார்] இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளனர். தாங்கள் வழமைபோன்றே எரிவாயு கலவையை பராமரித்து வருவதாக அவர்கள் கூறியுள்ளனர் . உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்ட தரநிலைகளுக்கு அமைவாகவே விநியோகிப்பதாகவும் நுகர்வோருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களுக்கு அனுமதியளிப்பதில்லை எனவும்நாட்டின் காலநிலை மற்றும் ஏனைய காரணிகளை கருத்தில் கொண்டே தற்போதைய கலவை தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

எவ்வாறாயினும், நுகர்வோர் விவகார அதிகாரசபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷான் குணவர்தன, உள்நாட்டு நுகர்வுக்கு விநியோகிக்கப்படும் எரிவாயுவின் கலவை குறித்து கவலைகளை எழுப்பியிருந்தார் . தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின் போது அவர் ,எல்.பி.ஜி. சிலிண்டர்களுக்கு எஸ். எல்.எஸ். தரநிலை உள்ளதாயினும் சிலிண்டரின் தரத்திற்கு மட்டுமே தரநிலை உள்ளதெனவும் அதில் உள்ள எரிவாயு கலவைக்கு அல்லவென்றும் எரிவாயு நிறுவனங்கள் எதையும் நிரப்பி விற்கலாமெனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இதுவரை, எல்.பி.ஜி .யின் கலவை 20% புரொப்பேன் மற்றும் 80% பியூட்டேனாக இருந்துவந்த நிலையில், புரொப்பேன் மற்றும் பியூட்டேன் சதவீதத்தை மாற்றியமையே வெடிப்புகளுக்கு காரணமாக இருக்கலாமென கூறப்படுகிறது. ஆனால் சமையல் வாயு தொடர்பான வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகிய இடங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், எல்.பி.ஜி. சிலிண்டர்கள் வெடித்ததாகக் காட்டப்படவில்லையென அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட உதவிப் பகுப்பாய்வாளர் ரொஷான் பெர்னாண்டோ ஊடகங்களுக்கு விளக்கமளித்திருப்பதுடன், உண்மையில் நடந்தது என்னவென்றால், சாதாரண வளிமண்டலத்திற்கு வாயு கசிந்து, அதன்மூலம் வளிமண்டலத்தில் இருந்த ஏனைய வாயுக்களுடன் கலந்து பின்னர் வெடித்திருப்பதாகவும் குறிப்பாக இது மின்னொழுக்கு அல்லது தீப்பொறி இருப்பதன் மூலம் இடம்பெறலாம் என்றும், எனவே வீடுகளின் மின் சுற்றுகளில் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானது என்றும் அவர் கூறியிருக்கிறார் .

இந்த விடயம் தேசிய மட்டத்தில் முக்கியம் வாய்ந்ததாக மாறியதால், எரிவாயு சிலிண்டர் வெடிப்பு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய விசேட ஆலோசனைக் குழுக் கூட்டமொன்றை புதன்கிழமை கூட்டுவதற்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன உத்தரவிட்டிருந்தார்.அதேவேளை இந்த வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக பலதரப்பினரும் இந்த விடயத்தைப் பற்றி வெவ் வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர் . சிலிண்டர்களின் தரம் குறைவாக இருப்பதாகவும், சிலிண்டரில் இருந்து எரிவாயுவைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் ரெகுலேட்டர்கள், வால்வுகள் மற்றும் குழாய்கள் போன்ற ஏனைய உபகரணங்களையும் அவர்கள் குறை கூறுவதையும் காணமுடிகிறது .இதனால் சமையல் வாயுவின் தரத்தை மட்டுமன்றி, உள்நாட்டில் பயன்படுத்தும் உபகரணங்களின் தரம் மற்றும் பாவனை குறித்தும் மக்கள் அவதானமாக இருப்பது மிகவும் அவசியமானதாகும்.இந்த வெடிப்புகளுக்கான காரணங்களை அதிகாரிகள் கண்டறிய முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இதற்கு தீர்வு காண்பதற்கு அதிககாலம் எடுக்கக்கூடாது . எனவே எரிவாயு பாவனையாளர்கள் தாங்கள் பயன்படுத்தும் எல்.பி.ஜி. சிலிண்டர்கள் முறையாகவும் பாதுகாப்பாகவும் பராமரிக்கப்படுவது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். பாவனையாளர்கள் தங்களுக்கான எல்.பி.ஜி. விநியோகம் தொடர்பாக அடிக்கடி சரிபார்க்க வேண்டும் . பேரழிவு ஏற்படும் வரை காத்திருக்காமல் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும்.

அரசாங்கம் இப்போது எரிவாயு விநியோகம் தொடர்பாக ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ள நுகர்வோர் விவகார அமைச்சர் லசந்த அழகியவன்ன, குறுகிய கால இடைவெளியில் எரிவாயு விபத்துக்கள் மிகக் கடுமையாக அதிகரித்துள்ளன. 'தினமும் 10 முதல் 15 வெடிப்பதை நாங்கள் விரும்பவில்லை. எனவே நான் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளேன்' என்று பாராளுமன்றத்தில் அமைச்சர் கூறியிருக்கிறார் .அண்மைக்காலமாக நாட்டில் சமையல் வாயுவுக்கு தட்டுப்பாடும் நீடித்து வருகிறது. இதனால் தலைநகர் கொழும்பு உட்பட நகர்ப்பகுதிகளில் வாழும் மக்கள் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருந்தனர்.அதேவேளை எரிவாயு சிலிண்டரின் விலை அண்மையில் அதிகளவில் உயர்த்தப்பட்டதால் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. கடந்த ஆகஸ்டில் 1,500/- வாக இருந்த எரிவாயு சிலிண்டரின் விலை கடந்த அக்டோபர் மாத இறுதியில் 2,600/-வாக உயர்த்தப்பட்டது. உலகின் பெரும்பாலான நாடுகளில், ஒரு தயாரிப்பு குறைபாடுள்ளதாக அல்லது சேதத்தை ஏற்படுத்தியதாகக் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட நிறுவனம் தயாரிப்பைத் திரும்பப் பெற்றுக்கொள்வதுடன், பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இழப்பீடு செலுத்தும் நடைமுறை காணப்படுகிறது.இப்போது பொது மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் எரிவாயு வெடிப்புகள் தொடர்பாக அரசாங்கம் துரித நடவடிக்கையை எடுக்க வேண்டும் . வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக முழுமையாக விசாரித்து, மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதிருப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் .

# இலங்கையர்கள் யாவரும் ஒரே பெரிய குடும்பத்தின் உறுப்பினர்களா?

**காமந்தி விக்கிரமசிங்க**

இலங்கையர்களின் அடையாளம் குறித்த பல்வேறு வரலாற்றுக் கதைகள் இருந்தபோதிலும், மரபணு ஆய்வுகள் தற்போது நாட்டில் உள்ள பல்வேறு இனக்குழுக்களிடையே ஒற்றுமையை உறுதிப்படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளன. கொழும்பில் உள்ள ஜீன்டெக் மொலேகியூலர் டயக்நொஸ்டிக்ஸ் (Genetech Molecular Diagnostics) உடன் இணைந்து கொழும்பு பல்கலைக்கழகம் நடத்திய சமீபத்திய முன்னோடியான ஆய்வில், நாட்டில் உள்ள நான்கு முக்கிய இனக்குழுக்களிடையே ஒற்றுமைகள் இருப்பதை நிரூபிக்கும் முடிவுகளை ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர். அதுமட்டுமல்லாமல், எக்ஸ்–குரோமோசோம் டி.என்.ஏ. மரபணு கைரேகையை அறிமுகப்படுத்துவதிலும் இந்த ஆய்வு வெற்றி பெற்றுள்ளது. இதன்மூலம் குடும்ப உறுப்பினர்களிடையே உயிரியல் ரீதியான உறவுகள் தொடர்பாகவும் தீர்வு காண உதவுகிறது.

### எக்ஸ்-குரோமோசோம் கைரேகை

'இலங்கைக்கு – எக்ஸ் குரோமோசோம் மரபுத்திரியிழை கைரேகையை அறிமுகப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்' என்ற கருத்தை ஆய்வின் முதன்மை ஆய்வாளரும், மூலக்கூறு மரபியல், விலங்கியல் , சுற்றுச்சூழல் விஞ்ஞானம் மற்றும் விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான டாக்டர் கயானி கல்ஹென தெரிவித்துள்ளார். கைரேகை என்பது மக்களை அடையாளம் காணும் சிறப்பான தரமாகும். டி.என்.ஏ.கள் சம்பந்தப்பட்ட சில குடும்ப உறவு தகராறுகள் முடிவடையவில்லை. உதாரணமாக, பெண் ஒருவரின் தந்தை இறந்திருந்தால் அல்லது இல்லாதபோது அடையாளம் காண்பது சாத்தியமில்லை. இருப்பினும், எக்ஸ் குரோமோசோம் டி.என்.ஏ .கைரேகை தந்தை இல்லாத நிலையிலும் தந்தையை அடையாளம் காண உதவுகிறது.

அத்தகைய நிகழ்வின் போது, பெற்றோரை தீர்மானிக்க தந்தைவழி பாட்டியைப் பயன்படுத்தலாம். அவர் மேலும் கூறுகையில், இத்தகைய சோதனையின் துல்லியம் தந்தை இருக்கும் போது செய்யப்படும் சோதனையின் துல்லியத்தைப் போன்றது. பெற்றோர் இல்லாத போது பெண் உடன்பிறப்புகளுக்கிடையிலான சிக்கலான குடும்ப உறவுகளை தீர்மானிக்க, புதிய முறைமையை பயன்படுத்த முடியும் .மருமகள் அல்லது பெறாமகளுடன் தந்தைவழி அத்தை / சிறிய தந்தை மற்றும் மருமகன்களுடன் தாய்மாமன் ஆகியோருக்கு இடையேயான சிக்கலான குடும்ப உறவுகளை அதிக துல்லியத்துடன் தீர்மானிக்க புதிய முறை பயன்படுத்தப்படலாம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.



நாட்டின் நான்கு இனக்குழுக்களிடையே இன ஒற்றுமைகள் இருப்பதை வெளிப்படுத்துகிறது ஆய்வு — நந்திக பெரேரா

### ஆராய்ச்சி முறை



எக்ஸ் குரோமோசோம் டி.என்.ஏ கைரேகை தந்தை இல்லாத நிலையிலும் தந்தைவழியை அடையாளம் காண உதவுகிறது — கயானி கல்ஹென

கைரேகை முறைகள் மரபணுவில் மிகவும் மாறக்கூடிய பகுதிகளைப் பயன்படுத்துகின்றன. பொதுவாகப் பயன்படுத்தப்படும் டி.என்.ஏ. கைரேகை முறைமையானது இலகுவான வரிசை உருவிடு அல்லது ஒன்றன்பின் ஒன்றான வரிசை (எஸ்.டி.ஆர்.) குறியீடுகளைப் பயன்படுத்துகிறது. மனித மரபணுவில் 23 ஜோடி குரோமோசோம்கள் உள்ளன. அவற்றில் ஒரு ஜோடி மட்டுமே தனிநபர்களின் பாலினத்தை தீர்மானிப்பதில் ஈடுபட்டுள்ளது. அவை எக்ஸ் மற்றும் வை குரோமோசோம்கள். மீதமுள்ள 22 ஜோடிகள் ஆட்டோசோம்கள் பால்சாரா மரபுத்திரியிழைகள் என்று அறியப்படுகின்றன.

'ஆட்டோசோம்களில் பரவப்பட்டஎஸ். ரி. ஆர். குறியீடுகளைப் பயன்படுத்தும் போது, அது ஆட்டோசோமால் டி.என்.ஏ. கைரேகை என அழைக்கப்படுகிறது. மேலும் இது பொதுவாகப் பயன்படுத்தப்படும் முறையாகும்' என்று டி.என்.ஏ. தட்டச்சுத் தலைவரும், இலங்கையின் டி.என்.ஏ. வகைப்படுத்தல் தலைவரும் ஜீன்டெக் மொலேகியூலர் டயக்நொஸ்டிக்ஸின் சிரேஷ்ட விஞ்ஞானியுமான நந்திக பெரேரா விளக்கியுள்ளார்.அதேபோல் எக்ஸ் குரோமோசோமில் உள்ள எஸ். ரி. ஆர். குறியீடுகளைப் பயன்படுத்தும் போது அது எக்ஸ் –குரோமோசோம் டி. என். ஏ. கைரேகை எனப்படும். இலங்கையில் எங்களிடம் எக்ஸ் குரோமோசோம் டி.என்.ஏ. கைரேகை இல்லை. எனவே,பெண்

ஆரம்பத்தில் ஒரே குழாயில் 16 வெவ்வேறு எஸ். ரி. ஆர்.குறியீடுகளை ஒரே நேரத்தில் பகுப்பாய்வு செய்யும் மதிப்பீட்டை அவர்கள் வடிவமைத்துள்ளனர். எங்கள் மதிப்பீடு முழு எக்ஸ் குரோமோசோமையும் உள்ளடக்கியது. ஒரு குழாயில் 16 எதிர்வினைகளை நடத்துவது மிகவும் சவாலான விடயமாக இருந்தது. ஏனெனில் அவை ஒன்றுக்கொன்று குறுக்கீடு செய்ய முனைகின்றன. அதே தரத்துடன் அவற்றைப் பெருக்குவது சவாலாக இருந்தது.எக்ஸ் குரோமோசோம் கைரேகைக்கு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே ஒரு வர்த்தக சோதனைக் கருவி மட்டுமே உள்ளது. அதில் 12 குறியீடுகள் மட்டுமே உள்ளன. ஆனால் எங்களுடையது 16 குறியீடுகளை பகுப்பாய்வு செய்கிறது. இது ஆராய்ச்சியின் முதல் பகுதியாகும் என்று பெரேரா குறிப்பிட்டார் .

முறைமைகள் தொடர்பாக மேலும் விளக்கிய பெரேரா, இரண்டாவது கட்டமாக இந்தப் பரிசோதனையை இலங்கை மக்களுக்குப் பயன்படுத்துவதாகத் தெரிவித்தார். நபரை அடையாளம் காணும் முடிவுகள் பொதுவாக சோதிக்கப்பட்ட நபரின் நிகழ்தகவு என வெளிப்படுத்தப்படுகிறது. இந்த நிகழ்தகவு எமது மக்கள்தொகையின் 16 குறியீடுகளில் ஒவ்வொன்றின் மாறுபாட்டின் அளவைபயன்படுத்தி கணக்கிடப்படுகிறது. எவ்வாறாயினும், இலங்கையில் பல இனங்கள் இருப்பதால் அவற்றின் மரபணு அமைப்பில் வேறுபடலாம். ஒவ்வொன்றும் தனித்தனியாக பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். இதற்கு குடித்தொகை மரபணு ஆய்வு தேவைப்படுகிறது. இது கடந்த மூன்று தலைமுறைகளாகக் கலக்கப்படாத சிங்களவர்கள், இந்தியத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள் மற்றும் சோனகர்கள் ஆகிய 838 ஆட்களிடமிருந்து எடுக்கப்பட்ட இரத்தத்தைப் பயன்படுத்தி ஆய்வு செய்யப்பட்டது. ஆட்டோசோம்களில் பரவப்பட்ட எஸ். ரி. ஆர். குறியீடுகளைப் பயன்படுத்தும்போது, அது ஆட்டோசோமால் டி.என்.ஏ. கைரேகை என்று அழைக்கப்படுகிறது. மேலும் இது பொதுவாகப் பயன்படுத்தப்படும் முறையாகும்.

### ஆச்சரியமான முடிவுகள்

மக்கள் தொகை மரபணு ஆய்வின் பெறுபேறை டாக்டர் கல்ஹென விளக்கினார். சிங்கள சோனகர்களும் இலங்கைத் தமிழர்களும் மிகவும் ஒத்திருப்பதை எங்கள் முடிவுகள் காட்டுகின்றன. இருப்பினும், முந்தைய மூன்று இனங்களுடன் ஒப்பிடும் போது,இணை மரபணு அடுக்கு நிகழ்வுகளை பொறுத்தவரை இந்தியத் தமிழர்களில் 0.3–0.4% வித்தியாசம் இருந்தது.

கூடுதலாக, ஆய்வு செய்யப்பட்ட நான்கு இனங்களில் சிங்களவர்களும் சோனகர்களும் மிக நெருக்கமானவர்கள் என்பதை எங்கள் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

வரலாற்று ஆதாரங்களின்படி, பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு வருகைதந்த ஆண் வர்த்தகர்களிடமிருந்து சோனகர்கள் வந்தவர்கள். இதன் பின் அவர்கள் சிங்கள மற்றும் இலங்கைத் தமிழர்களை திருமணம் செய்துகொண்டு இங்கு குடியேறினர். இரு குழுக்களிடையே காணப்பட்ட நெருங்கிய மரபணு ஒற்றுமைக்கு இதுவே காரணமாக இருக்கலாம்.

எக்ஸ் குரோமோசோம்கைரேகை முறை தாய்வழி வரலாற்றைப் பிரதிபலிக்கிறது என்பதால், எங்கள் ஆராய்ச்சியின் போது இந்த ஒற்றுமை வெளிப்பட்டது. இலங்கை சோனகர்களின் இந்திய வம்சாவளியை நாங்கள் மேலும் அவதானித்தோம்.

எவ்வாறாயினும், இந்த முடிவுகள் அவற்றின் சரியான பின்னணியில் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று டாக்டர் கல்ஹென சுட்டிக்காட்டினார். பகுப்பாய்விற்குப் பயன்படுத்தப்பட்ட குரோமோசோமைப் பொறுத்து, முடிவுகள் வேறுபடலாம். நாங்கள் பார்த்த முடிவுகள் எக்ஸ் குரோமோசோம்களை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் அது ஆட்டோசோமால் அல்லது வை குரோமோசோம் எஸ்.டி.ஆர். என்றால், ஒவ்வொன்றும் எமது வம்சாவளியின் வெவ்வேறு கோணத்தை வெளிப்படுத்துவதால் முடிவுகள் வித்தியாசமாக இருந்திருக்கும்.

இந்த நான்கு இனக் குழுக்களையும் தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா மற்றும் கிழக்கு ஆசியாவில் உள்ள 14 வெவ்வேறு நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தோம். இலங்கையர்கள் ஐரோப்பியர்களுக்கும் தெற்காசிய மக்களுக்கும் மிகவும் நெருக்கமானவர்கள் என்பதை இங்கு கண்டோம். இந்த அவதானிப்பு சிங்களவர்களின் இந்தோ – ஆரிய வம்சாவளி மற்றும் திராவிட வம்சாவளியைக் கொண்ட தமிழர்களுடன் அவர்கள் கலப்பதுடன் ஒத்துப்போகிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

### டி.என்.ஏ. விபரக் குறிப்புக்கான செலவு

இலங்கையில் டி.என்.ஏ. பரிசோதனையை மேற்கொள்வதற்கான செலவு பற்றி கேட்டபோது, அதற்கு ஜீன்டெக்கில் ஒரு டி. என். ஏ.சுய விவரத்தை தயாரிக்க 14,000 ரூபா தேவைப்படும்.மூன்று டி.என்.ஏ. சுயவிவரங்களை உள்ளடக்கிய ஒரு நிலையான தந்தைவழி சோதனை விடயத்தில். 42,000 ரூபா தேவைப்படுகிறது. இருப்பினும், நீதித்துறைக்கு இந்த சேவை தள்ளுபடி விலையில் ஒரு சுய டி. என். ஏ. விவரத்திற்கு 12,000 ரூபாவாகும் .

ஆராய்ச்சியின் பொருந்தக்கூடிய தன்மை குறித்து அவர் மேலும் கூறுகையில், ஜீன் டெக் நிறுவனத்தில் வழக்கமான டி.என்.ஏ. கைரேகை பகுப்பாய்வில் எக்ஸ் –குரோமோசோம் கைரேகை இப்போது இணைக்கப்பட்டுள்ளது என்றார். கடந்த காலங்களில் முடிவில்லாமல் முடிவடைந்த சிக்கலான மற்றும் குறைபாடுள்ள உறவு தொடர்பான வழக்குகள் கூட இப்போது இந்த புதிய கருவி மூலம் திறமையாக தீர்க்கப்படும் என்று அவர் நம்பிக்கையுடன் இருக்கின்றார்.

டெய்லி மிரர்



எமக்கு400 மில்லியன் தாருங்கள்

# இந்திய அரசிடம் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் கோரிக்கை

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனதலைவர் அன்னராசா, செயலாளர், பொருளாளர் மற்றும் உப தலைவர் ஆகியோர் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதுவரை, யாழ். இந்திய துணைத்தூதுவராலயத்தில் நேரில் சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளனத் தலைவர் அன்ன ராசா,

யாழ். மாவட்ட மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையினால் பாதிக்கப்படுகின்றார்கள்.

அத்துமீறிய சட்டவிரோத இந்திய மீனவர்களின் பாதிப்பு எங்களுடைய மீனவ பரம்பலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதோடு மீனவ சமூகத்தில், மீனவர்கள் கூலி தொழிலுக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதோடு குடிப்பரம்பல் குறைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிராக பல போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டும் தற்போதும் இந்திய மீனவர்களின் வருகை பருத்தித்துறை மற்றும் நெடுந்தீவு பிரதேசங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றன இந்த வருகையினை கட்டுப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகிறோம். அந்த வகையில் நேற்று யாழ். இந்தியத் துணைத் தூதரைச் சந்தித்து பேசி உள்ளோம்.

நாங்கள் பல கோடி ரூபாய் சொத்துகளை இழந்து இருக்கின்றோம். எங்களுடைய கடற்றொழில் அமைச்சு 500 கோடி ரூபாய்க்கு மேல் இந்திய அரசாங்கத்திடம் நஷ்ட ஈடு கோரியுள்ளது.

இருந்தபோதிலும் யாழ். மாவட்ட மீனவர்கள் கூட்டுறவு சங்கங்கள் சமாசங்கள், சம்மேளனங்களினை பொறுத்தவரை எங்களுக்கு குறிப்பிட்ட தொகையை அண்ணளவாக 400 மில்லியன் ரூபாவை எங்களுடைய கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்காக வழங்குமாறும் அதற்குரிய திட்டம் ஒன்றினை தயாரித்து கடந்த வாரம் கடற்றொழில் அமைச்சில் சந்தித்து கையளித்திருக்கின்றோம். எங்களுடைய மீனவர்களுடைய வாழ்வாதாரத்தை அதிகரிக்க இந்த 400 மில்லியன் ரூபா உதவியினை தொழிலாளர்களுக்கு மானியமாகவும் சுழற்சி முறையில் வழங்குமாறு கோரி நிற்கின்றோம். குறித்த கோரிக்கையினை தாம் பரிசீலிப்பதாக யாழ். இந்திய துணை தூதுவர் தெரிவித்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (75)

# மாணவர்கள் உற்சாகத்துடன் பாடசாலைகளுக்கு வருகின்றனர்

-வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு-

மழைக்கு மத்தியிலும் மாணவர்கள் பாடசாலைகளுக்கு உற்சாகமாக வருகை தருவதாக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நீண்ட நாட்கள் பாடசாலைகள் இயங்காமல் இருந்ததன் காரணமாக மாணவர்கள் மழைக்கு மத்தியிலும் உற்சாகத்துடன் பாடசாலைக்கு வருகின்றனர். அத்துடன் வினாசியோடை பாடசாலைக்குச் செல்கின்ற ஆசிரியர்களுக்கான போக்குவரத்து நெருக்கடி காணப்படுகின்றது. பரமன்கிராயில் இருந்து வினாசியோடை பாடசாலையைத் தாண்டி செல்கின்ற வீதி சீரின்மையால் ஆசிரியர்கள், மாணவர்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் இரு கல்வி வலயங்களின் ஆசிரியர்கள் மாணவர்கள் குளங்களின் வான் வெள்ளத்தினை கடந்து பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டி உள்ளது. இப்பகுதிகளில் பொலிசாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மாவட்டத்தில் உள்ள தற்காலிக கொட்டகைகள், தகரக் கூடாரங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் குளிரான சூழலினை எதிர்கொண்டுள்ளதாக பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகின்றது. (27)

# சைவத்தின் காவலர் ஆறுமுகநாவலர் குருபூசை

சைவத்துக்கும், தமிழுக்கும் அளப்பரிய பணிகளாற்றியவரும், ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படுபவருமான சைவத்தின் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நன்னாளான கடந்த சனிக்கிழமை முற்பகல் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் நாவலர் நினைவரங்கம் அவர் வாழ்ந்த புனித மண்ணான யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நாவலர் கலாசார மண்டபத்தின் முன்பாகப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆறுமுகநாவலர் திருவுருவச் சிலையடியில் இடம்பெற்ற வழிபாட்டில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க உப தலைவரும், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத் தலைவரும், பிரபல ஆன்மீகச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்து கொண்டு ஆறுமுகநாவலருக்கு மலர்மாலை அணிவித்தும், மலர் தூவியும் வணக்கம் செலுத்தினார்.

தொடர்ந்து யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவரும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் பிரதி முதல்வருமான செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வாழ்நாள் பேராசிரியருமான கலாநிதி அ.சண்முகதாஸ், பேராசிரியை கலாநிதி.திருமதி.மனோன்மணி சண்முகதாஸ் உள்ளிட்டோர் மங்கல விளக்கேற்றி வைத்தனர். தொடர்ந்து கடவுள் வணக்கமும் நாவலர் வாழ்த்தும் பண்ணுடன் ஓதப்பட்டது. வரவேற்புரையைத் தொடர்ந்து தொடக்கவுரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆற்றினார்.

தேசிய மட்டத்தில் விசேட தேவையுடையோருக்கான சிறந்த பாடசாலைகளில் முதலாம் இடத்தினை நிலைநாட்டிய கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை விருதினை கடந்த வியாழக்கிழமை பெற்றிருந்தது.

இதனைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி திரு.ஆறுதிருமுருகன் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் யாழ்.மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோரால் சிறப்பாக கௌரவிக்கப்பட்டார்.

யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் த.ஜெயசீலன் வாழ்த்துரையையும், செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையுரையையும் நிகழ்த்தினர். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆசிரியரும், இந்து சமய ஆன்மீகப் பிரசாரகருமான செல்வி.கனகதுர்க்கா கனகரத்தினம் நாவலர் வழி எனும் தலைப்பில் நினைவுப் பேருரை வழங்கினார்.

சுன்னாகம் வாழ்வகத்தைச் சேர்ந்த உயர்தர மாணவன் சந்திரகுமார் அமலசாம் நடையில் நின்றுயர் நாயகன் நாவலன் எனும் தலைப்பிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவன் ஜெயபாலன் தவேதன் எழுந்த கொழுங்கலல் எனும் தலைப்பிலும் உரைகள் நிகழ்த்தினர்.

இதேவேளை, குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் சைவமும் தமிழும் எனது இரு கண்கள் எனப் பொறிக்கப்பட்ட ஆறுமுகநாவலரின் அழகிய திருவுருவப்படம் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினரால் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (18)

# வடமராட்சி கிழக்கு ஒன்றியமூடாக வறிய குடும்பங்களுக்கு உதவி

மருதங்கேணி வடக்கைச் சேர்ந்தவரும் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசித்துவருபவரும், சுவிஸ் - வடமராட்சிகிழக்கு ஒன்றியத்தின் பிரதிநிதியுமாகிய சின்னையா யோகராசா (குணேஸ்) என்பவர் தனது 58 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு வடமராட்சிகிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட நலிவுற்ற 58 குடும்பங்களுக்கு உலர்உணவுப்பொதிகள் மேற்படி ஒன்றியம் ஊடாக கடந்தவாரம் வழங்கியுள்ளார்.

நாகர்கோவில் கிழக்கு தொடக்கம் போக்கறுப்பு வரையிலான 12 கிராம அலுவலர்பிரிவுகளைச் சேர்ந்த மேற்படி குடும்பங்களுக்கு தலா 5000 ரூபா பெறுமதியான உலர்உணவுப்பொதிகள் ஒன்றியத்தின் செயற்பாட்டாளர்களால் வழங்கிவைக்கப்பட்டன. (16)

# மாணவர்களிடம் சேவை மற்றும் வசதி கட்டணங்கள் அறவிடுவதை நிறுத்தவும்

-எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச-

பா.கிருபாகரன்,
ந.ஜெயகாந்தன்

பாடசாலைகளில் மாணவர்களிடம் அறவிடப்படும் சேவை மற்றும் வசதிக் கட்டணங்கள் அறவிடப்படுவதை நிறுத்த வேண்டும் என்றும், இது தொடர்பிலான சுற்றுநிருபமொன்றை வெளியிடுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கல்வி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற வரவு செலவு திட்டத்தின் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே எதிரிக்கட்சித் தலைவர் இவ்வாறு வலியுத்தினார்.அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி நிலைமைக்கு மத்தியில் வரிசை யுகம் உருவாகி வந்தது. பால்மா, எரிவாயு என்று வரிசைகள் உருவாகின. ஆனால் இப்போது எரிவாயு வரிசை வெடிப்புச் சம்பவங்களால் நின்றுள்ளது. இவ்வாறு மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நீங்கள் சில விடயங்களை பாடசாலைகளில் ஏற்படுத்துகின்றீர்கள். அதாவது வசதி மற்றும் சேவைக் கட்டணம் என்று மாணவர்களிடம் பணம் அறவிடுகின்றீர்கள்.

மக்கள் சுயமாகவே பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய பணத்தை நன்கொடையாக வழங்குவார்களாக இருந்தால் அதில் பிரச்சனைகள் கிடையாது. அது நல்ல வேலையே. ஆனால் பாடசாலைகள் தயவு செய்து சேவை மற்றும் வசதிக் கட்டணங்களுடன் வருமாறு பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

## வெடிபொருள் வெடிப்பில் காயமடைந்தவர் தொடர்ந்தும் சிகிச்சை பெறுகின்றார்

முல்லைத்தீவு -புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட சுதந்திரபுரம் கிராமத்தில் வெடிபொருள் வெடித்து காயமடைந்த குடும்பஸ்தர் தொடர்ந்தும் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த 24ஆம் திகதி சுதந்திரபுரம்கொலனி பகுதியில் வயல் வேலை செய்துகொண்டிருந்த போது மண்வெட்டியினை நிலத்தில் வெட்டியபோது நிலத்தில் புதைந்திருந்த வெடிபொருள் வெடித்ததில் அதே பகுதியினை சேர்ந்த 32 அகவையுடைய குடும்பஸ்தர் ஒருவர் காலில் காயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆதாரமருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார். (15)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 08.30 மணியிலிருந்து மாலை 05 மணிவரை யாழ் .பிரதேசத்தில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

பருத்தித்துறை பகுதியில் எஸ்.எஸ்கட்டிடம் , கல்லூரிவீதி , தம்பசிட்டி , கிராமக்கோடு , பருத்தித்துறை இலங்கை போக்குவரத்துச்சபை , பருத்தித்துறைசந்தை , சாலம்பை , சாரையடி , சிவன் கோவிலடி, தம்பசிட்டிசந்தி , வி.எம் . வீதி , விஸ்வகுல வீதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

# முழங்காவில் ம.விக்கு பேருந்து சேவை வேண்டும் எனக் கோரிக்கை

கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தின் மாணவர்களை இலக்காகக் கொண்டு பேருந்து சேவைகள் நடாத்தப்பட வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகளில் ஒன்றான முழங்காவில் மகா வித்தியாலயத்தில் 1,000 வரையான மாணவர்கள் கல்வி கற்கும் நிலையில் இப்பாடசாலைக்கு வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, ஜெயபுரம், பல்லவராயன் கட்டு, கரியாலைநாகபடுவான், நாச்சிக்குடா, இரணைமாதா நகர், அன்புபுரம், மன்னார் மாவட்டத்தின் வெள்ளாங்குளம், இலுப்பைக்கடவை ஆகிய கிராமங்களில் இருந்து மாணவர்கள் வருகை தருகின்றனர். பெருமளவு மாணவர்கள் பாடசாலைக்கு வருவதில் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

முழங்காவில் மகா வித்தியாலயத்தினை இலக்காக கொண்ட பேருந்து சேவையினை நடாத்துவதன் மூலம் மாணவர்கள் இலகுவாக பாடசாலைக்கு வருகை தர முடியும். தற்போது இரணைமாதாநகர், நாச்சிக்குடா கிராமங்களின் மாணவர்கள் கூடுதலான போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். இந்நிலையில் பேருந்து சேவைகளில் பாடசாலைக்கு மாணவர்கள் வந்து திரும்பக் கூடிய வகையில் முழங்காவில் நகரத்தில் இருந்து சேவையில் ஈடுபட வேண்டும் என்பதே பெற்றோர்களின் கோரிக்கையாகும். (27)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

முல்லைத்தீவு -முள்ளியவளை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர், அதிபர் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இதற்கான உதவியை அமெரிக்காவில் வசிக்கும் பாலமயூரன் மணிமேகலா தம்பதிகளின் புதல்வி அபிநயாவின் இரண்டாவது பிறந்த தினத்தை முன்னிட்டு 30 பேருக்கு புத்தகப்பை, கற்றல் உபகரணங்கள், உணவுப் பெட்டி, மற்றும் ஆடைகளும் வழங்கிவைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பஞ்சலிங்கம் ஸ்ரீ, செல்வம் தயாபரன், கிஷோர், ராஜா, ரஞ்சன் விக்னா, கலைஞர் தவராஜா முன்னாள் விவசாய அமைச்சர் க. சிவநேசன் மற்றும் யூட்சன் போன்றோரும் கலந்து கொண்டிருந்தனர். (27)

# மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடி தொடர்பாக கூட்டத்தில் ஆராயப்படும்

- மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு-

முல்லைத்தீவு- மாந்தை கிழக்கு மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடி தொடர்பாக இன்று மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள போக்குவரத்து துறையினருடனான கலந்துரையாடலில் ஆராயப்பட உள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தெரிவித்தார்.

மாந்தை கிழக்கில் பாடசாலைகளுக்கு தனியார் பேருந்தில் செல்கின்ற மாணவர்கள் பாடசாலை முடிந்தவுடன் வீடு திரும்ப முடியாதது தொடர்பாக கேட்ட போது மாணவர்கள் வீடு திரும்ப முடியாது இருப்பது தொடர்பாக தனக்கு முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. ஊடக வழியாகத்தான் தகவலை அறிந்து கொண்டேன்.

இன்று போக்குவரத்து துறையினருடன் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் இவ்விடயம் தொடர்பாக ஆராயப்படும் எனவும் தெரிவித்தார். மாந்தை கிழக்கில் இருந்து பல பாடசாலைகளுக்கு காலையில் மாணவர்களை ஏற்றுகின்ற தனியார் பேருந்து பாடசாலை முடிந்தவுடன் மாணவர்களை ஏற்றாததன் காரணமாக பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்து வருகின்ற நெருக்கடி தொடர்கின்றது.

பாடசாலை முடிந்தவுடன் மாணவர்களை ஏற்றக் கூடிய தனியார் பேருந்து சேவை இடம் பெற வேண்டும் என்பது பெற்றோர்களின் கோரிக்கையாகும். கொரோனா தொடங்குவதற்கு



முன்னர் தனியார் பேருந்து பாடசாலை முடிந்தவுடன் மாணவர்களை வீடுகளுக்குத் திரும்பக் கூடிய வகையில் சேவையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (27)

## இந்திய நிதியமைச்சரை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சந்திப்பின் போது இரு தரப்பு ஒத்துழைப்பு குறித்து இரு நாடுகளினதும் நிதியமைச்சர்கள் ஆராய்ந்தனர் என இலங்கையின் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

பொருளாதார ஒத்துழைப்பு திட்டங்கள் மூலம் இந்தியா வழங்கிய உதவிகளிற்காக பசில் ராஜபக்ச தனது நன்றிகளை தெரிவித்துள்ளார்.

இரு தரப்பு உறவுகளை எவ்வாறு மேலும் வலுப்படுத்தலாம் என்பது குறித்து இரு நாடுகளினதும் நிதியமைச்சர்களும் ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இன்று சந்திக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டார்.

# நவீனங்கள் அனைத்தும் இயற்கையின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும்

## - யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு-

நவீனங்கள் அனைத்தும் இயற்கையின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலே இயற்கையின் சீற்றத்தில் இருந்து தப்பிக்கலாம் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ந.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற 'சைவசமய வாழ்வியல் முறைமைகளில் இயற்கை மேலாண்மை' என்ற ஆய்வரங்க நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;,

இயற்கை பலம் வாய்ந்த சக்தி.அதற்கு தடங்கல்களை ஏற்படுத்தினால் பெரும் துயரங்களைச் சந்திக்க நேரிடும். தற்போது நவீன விஞ்ஞான உலகில் வாழ்கிறோம்.இந்த நவீனங்கள் அனைத்தும் இயற்கையை விஞ்சிவிடாத அளவிற்கு இருக்க வேண்டும்.

அளவுக்கதிகமாக இயற்கையை புறக்கணித்தால் அது பெரும் சீற்றங்களை ஏற்படுத்தி சோகங்களை தரும்.இன்று வீதிகளை,வீடுகளை,மதில்களை அமைக்கும் போது நீர் வடிந்தோட வழி விடுவதில்லை.நாம் இன்று இயற்கையை மதிப்பதில்லை. அதனால் தான் வெள்ள இடரை சந்திக்கிறோம். அதனால் டெங்கு பிரச்சினை,தெருவில் வெள்ளம் உள்ளிட்ட பல சவால்களுக்கு முகம் கொடுக்கிறோம். இயற்கையை அதன் வழியில் விட்டு நாமும் அதன் மூலம் பயன்பெறப் பழகிக்கொள்ள வேண்டும்.

இன்று இயற்கையை அழித்து மாட மாளிகைகளை அமைத்து வருகிறோம்.இயற்கையை அழிப்பதைத் தவிர்த்து அதனோடு சேர்ந்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.மரங்களைப் பாதுகாப்பது மிக அவசியம்.ஆனால் இன்று நாம் வீட்டினைச் சூழ மரங்களை வெட்டி விட்டு கொங்கிறீட் இடுகிறோம்.

அத்தோடு பலரும் தமது சிறு பராயத்தில் சமய வழிபாட்டில் ஈடுபட்டு இடை நடுவே அதனை விடுத்து பின்னர் மீண்டும் வயோதிபப் பருவத்தில் அதனை பின்பற்றுகின்றனர்.அவ்வாறு இல்லாமல் ஒவ்வொருவரும் தமது வாழ்வில் தொடர்ச்சியாக சமய வழிபாட்டினைத் தொடர வேண்டும்.சமய முறைமைகளில் பல நல்ல விதந்துரைகள் காணப்படுகின்றன.அதனை பின்பற்றுவதன் மூலம் இயற்கையான உலகில் அமைதியாக வாழ்ந்து பலருக்கும் நன்மை பயக்க முடியும்.என்றார். (13)

பால்நிலை வன்முறைக்கெதிரான
16 நாள் செயற்பாடு - 2021
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
கல்வி மனித உரிமை. அதில்
ஆண் பெண் பேதம் ஆகாது.
சகலருக்கும் கல்வி
சமத்துவமாய் வழங்குவோம்.
யாழ் சமூக செயற்பாட்டு மையம்

# யானைகளிடம் இருந்து பயிர்களை காக்க உதவுங்கள்



கிளிநொச்சி -கந்தபுரத்தில் யானைகளினால் 50 ஏக்கர் வரையான நெற்பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளதாக அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நேற்று மற்றும் நேற்று முன்தினம் இரவு வேளையில் ஆனைவிழுந்தான் காடு வழியாக கந்தபுரம் வயல் நிலங்களுக்குள் புகுந்த யானைகள் 50 ஏக்கர் வரையான நெற்பயிர்களை அழித்துள்ளன.

பசளை, களை கிருமி நாசினிகளின் நெருக்கடிகளுக்கு மத்தியில் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்பயிர்களை யானைகளும் அழிப்பது விவசாயிகளுக்கு பெரும் இழப்பீடுகளை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். வனஜீவராசிகள் திணைக்களம் யானை வெடிகளை விவசாயிகளுக்கு விரைந்து வழங்க வேண்டும்.

விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகளுக்கு கமநல சேவை நிலையம் இழப்பீடுகளை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வனஜீவராசிகள் திணைக்களம் ஆனைவிழுந்தான் காட்டுப் பகுதியில் உள்ள யானைகளை துர இடங்களுக்கு துரத்திச் சென்று விடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கந்தபுரம் விவசாயிகளுக்கு ஏற்பட்டு வருகின்ற யானைகளிலான நெருக்கடிகளில் இருந்து விவசாயத்தினை காப்பதற்கு மாவட்டச் செயலகம், கரைச்சி பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (27)

# வீதி புனரமைப்பில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக வெள்ளம்

முல்லைத்தீவு- மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட வன்னிவிளாங்குளம் கிராமத்துக்கான வீதி புனரமைப்பில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக வெள்ள நீர் தேங்கி தமது பயிர் செய்கை பாதிக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட வன்னிவிளாங்குளம் கிராமத்தின் குடியிருப்பு வீதி சபரி கம வேலைத்திட்டத்தின் கீழ் 20 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதி புனரமைப்பின் போது போது வீதிகளுக்கு குறுக்காக மதகுகள் அமைக்க வேண்டிய நிலையில் அந்த மதகுகள் அமைக்கப்படாத நிலையில் வீதியை புனரமைத்துத்துள்ளமையால் குறிப்பிட்ட சில காணிகளுக்குள் நீண்ட நாட்களாக வெள்ளநீர் தேங்கி காணப்பட்டதுடன் குறிப்பிட்ட சில வீடுகளுக்குள் வெள்ள நீரும் புகுந்து பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் தமது வாழ்வாதாரத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள விவசாய செய்கையும் இவ்வாறு நீர் தேங்கியதால் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் மாந்தை கிழக்கு பிரதேச சபையினர் தெரிவித்ததாவது, குறித்த வீதிகளுக்கு அமைக்கப்பட வேண்டிய மதகுகள் அமைக்கப்படவில்லை என்றும் இதனால் இந்த வெள்ள நீர் தேங்கி அவர்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன ஆகவே இந்த இடங்களில் மதகு களை அமைப்பதற்கு அடுத்த ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (55)

# அருளாசியுரையும் வேதபாராயண நிகழ்வும்

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம் பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில் நாளை காலை 6.30 மணிக்கு முல்லைத் தீவு குமுழமுனை கற்பகவிநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள் திருஞானசம்பந்தக்குருக்களின் ; அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# மக்கள் பாவனையில் உள்ள பொது வீதியில் மணல் அகழ்வு



தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு- ஜே/301 கிராமத்தில் தம்புதோட்டம் படை முகாம் முன்பாக உள்ள நகரசபைக்கு உரித்தான பொது ஒழுங்கை ஒன்றில் நேற்று இரவு வேளையில் மணற் கொள்ளையர்களால் பெருமளவான மணல் அகழப்பட்டுள்ளது.

படை முகாம் முன்பாக உள்ள ஊரெல்லைத் தெருவிலேயே இவ்வாறு ஐந்து லோட்டுக்கும் மேற்பட்ட மணல் ஒரே இரவில் அகழப்பட்டுள்ளதாக அப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குடிமனைகள்,தோட்ட நிலங்கள் உள்ள குறித்த ஒழுங்கையில் மணல் அகழப்பட்ட சம்பவம் தொடர்பாக அப்பகுதி மக்கள் இராணுவத்தினரிடம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அப் பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில்;,

இதுவரை காலமும் மணற் கொள்ளையர்கள் அல்லாரை வாய்க்கால் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்தனர்.தற்போது வாய்க்காலில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பொது ஒழுங்கைகளில் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர். இதனால் எமது ஒழுங்கையில் வெள்ள நீர் தேங்கி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது.இதனை தடுக்காவிட்டால் காலப்போக்கில் எமது காணிகளுக்குள்ளும் மணற் கொள்ளையர்கள் மணல் அகழ்வில் ஈடுபடக் கூடும்.எனவே நாம் இதனை தடுக்கும் நோக்கில் 523 ஆவது படைப் பிரிவினரிடம் இது தொடர்பாக முறையிட்டுள்ளோம்.இராணுவத்தினரும் மணற்கொள்ளையர்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர்.அத்துடன் தென்மராட்சி பிரதேச செயலரிடமும் மகஜர் ஒன்றினை கையளிக்கவுள்ளோம். என மேலும் அவர்கள் தெரிவித்தனர்.- (13)

# தென்மராட்சியில் பூஸ்டர் பெறத் தவறியோர் சனிக்கிழமை பெற்றுக் கொள்ள அறிவிப்பு

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் பூஸ்டர் தடுப்பூசி பெறத் தவறியிருப்பின் எதிர்வரும் சனிக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வருகை தந்து தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்;,

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் தென்மராட்சி பிரதேசத்தில் முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாத காலத்தை பூர்த்தி செய்தவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.முதல் நாளில் 90பேரும்,இரண்டாவது நாளில் 108 பேரும் தென்மராட்சியில் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்ற 60 வயதை பூர்த்தி செய்த அனைவருக்கும் பூஸ்டர் வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர். (13)

# இடமாற்றம் பெற்று செல்லும் பொலிஸ் அதிகாரிக்கு பாராட்டுகள்




முல்லைத்தீவு -ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியான ஆர்.எம்.ஜி.டி.ரத்நாயக்க கடந்த 29ஆம் திகதியில் இருந்து இடமாற்றம் பெற்றுள்ளார். குறித்த அதிகாரி பணியில் இருந்த காலத்தில் மக்களுடன் நல்லுறவினை பேணியதுடன் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதில் மக்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக செயற்பட்டவர். ஒட்டுசுட்டான் பிரதேச செயலகக் கூட்டங்களில் மக்களின் நலன்சார்ந்து கருத்துகளை வெளியிட்டு வந்தவர். பொலிசாருக்கும் பொது மக்களுக்கும் இடையே நல்லுறவு பேணப்பட வேண்டும் என்பதில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் பணி தொடர்பாக ஒட்டுசுட்டான் மக்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். (27)

# வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சடலமாக மீட்பு



சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு-அறுகுவெளிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து செவ்வாய்க்கிழமை மாலை ஆணொருவரின் சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டது.

குறித்த பகுதியூடாக ஆடு மேய்க்கச் சென்றவர்கள் வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் சடலத்தை அடையாளம் கண்டு மீட்டனர்.

சடலமாக காணப்பட்ட நபர் புத்தூர் வடக்கு பகுதியைச் சேர்ந்த வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் சுப்பிரமணியம் சிவபாலன் (51) என தெரியவந்தது.

வெளிநாட்டில் உள்ள ஒருவருடைய காணியை பராமரிக்க அறுகுவெளி பகுதிக்கு இவர் வந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.குறித்த நபர் உயிரிழந்து சில நாட்கள் கடந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (13,40)

# வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கைக்கான விதை உள்ளீடுகள் வழங்கல்

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 135 குடும்பங்களுக்கான விதை உள்ளீடுகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் இப்பிரதேசத்திலுள்ள பாலூட்டும்தாய்மார், கர்ப்பவதிகள் மற்றும் 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களைக்கொண்ட குடும்பங்கள் ஆகியோரை உள்ளடக்கிய 135 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான விதை உள்ளீடுகளை பிரதேச செயலர் மற்றும் உதவிப்பிரதேச செயலர் ஆகியோர் அன்றையதினம் வழங்கி ஆரம்பித்து வைத்தனர்.



# பயன்படுத்தப்படாமல் இருந்த சிலிண்டரில் ஏற்பட்ட கசிவால் அடுப்புவெடித்துச் சிதறியது

### -பாலாவியில் உணவகத்தில் சம்பவம்-

பாலாவி கரம்பை ஹூதா பள்ளி வீதியில் அல்ஹூதா பாலர் பாடசாலைக்கு முன்பாக உள்ள உணவகத்தில் சமையல் அறையில் பயன்படுத்தப்படாமல் இருந்த சமையல் எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவால் அடுப்பு முழுமையாக நேற்று புதன்கிழமை பகல் வெடித்துச் சிதறியுள்ளது. எனினும், இந்த வெடிப்புச் சம்பவத்தில் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சமையல் எரிவாயு சிலிண்டரின் ரெகுலேட்டர் மேல் பகுதியில் தீப்பிடித்த நிலையில் சமையலுக்கு பயன்படுத்தப்படும், கண்ணாடியில் தயாரிக்கப்பட்ட கேஸ் அடுப்பிலேயே இந்த வெடிப்பு ஏற்பட்டதாக அந்த உணவகத்தின் உரிமையாளர் தெரிவித்தார். சம்பவம் இடம்பெற்ற போது உணவகத்தின் உரிமையாளர் மாத்திரமே இருந்துள்ளார். மாலை நேரத்திற்கு தேவையான சிற்றுண்டிகளை தயாரித்துக் கொண்டிருந்த போது, சமையலறையில் திடீரென வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஹோட்டல் உரிமையாளர் கூறினார்.

அத்துடன், அடுப்பிலிருந்து ரெகுலேட்டரை கழற்றிய போது சமையல் எரிவாயு சிலிண்டரில் தீப்பிடித்ததுடன், பொங்கிய நிலையில் குமிழ்கள் வெளியே வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னரும், சிறிய அளவில் இவ்வாறு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த வெடிப்பு சம்பவம் தொடர்பில் மேற்படி சமையல் எரிவாயு நிறுவன அதிகாரிகளுக்கும், கிராம சேவகருக்கும் அறிவித்துள்ளதாகவும் உணவகத்தின் உரிமையாளர் மேலும் தெரிவித்தார்.

# சிலிண்டரை அடுப்புடன் இணைக்கும் போது ரெகுலேட்டர் வெடித்தது

நுவரெலியா - நானுஓயா நகரில் உள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றின் சமையல் அறையில் பயன்படுத்தப்பட்ட கேஸ் சிலிண்டர் நேற்று புதன்கிழமை மதியம் வெடித்துள்ளது.

எரிவாயுவை கடத்தும் ரெகுலேட்டர் பகுதியிலேயே இந்த வெடிப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெடிப்பு சம்பவத்தை அடுத்து கேஸ் சிலிண்டர் தரையில் விழுந்து கவிழ்ந்துள்ளது.

இந்த கேஸ் சிலிண்டரின் ரெகுலேட்டர் பகுதியில் வெடிப்பு ஏற்பட்டு சிலிண்டர் தரையில் விழுந்து கவிழ்ந்ததால் அதிலிருந்த எரிவாயு அனைத்தும் சுமார் 15 நிமிடங்களில் வெளியேறிவிட்டதாக மேற்படி நிலையத்தின் ஊழியர்கள் தெரிவித்தனர்.

கேஸ் சிலிண்டரை அடுப்புடன் இணைக்கும் போதே இந்த வெடிச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேற்படி கேஸ் நிறுவன அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஊழியர்கள் மேலும் தெரிவித்தனர்.

# நுரை தள்ளும் சிலிண்டர்களால் அப்புத்தளை நகரில் பரபரப்பு

### -விறகு மற்றும் மண்ணெண்ணெய் அடுப்புக்களில் சமையல்-

அப்புத்தளை நகரில் நேற்று புதன்கிழமை பகல் ,எரிவாயு சிலிண்டரில் கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து மக்கள் பதற்றத்துடனும், பீதியுடனும் காணப்படுகின்றனர்.அப்புத்தளை நகரமே பரபரப்பு அடைந்தது.

அப்புத்தளை நகரின் உணவகமொன்றிற்கு நேற்று பகல் புதிய எரிவாயு சிலிண்டரொன்று கொண்டு செல்லப்பட்டது. அந்த உணவகத்தில் அந்த எரிவாயு சிலிண்டரை இயக்க ஆரம்பிக்குமுன், உணவக உரிமையாளர் சவர்க்கார நீரை சிலிண்டரின் வால்வு மீது தடவியதும், சவர்க்கார நீர் பொங்கி நுரை தள்ளவே எரிவாயு கசிவு ஏற்படுவது கண்டுப்பிடிக்கப்பட்டது.

உடனடியாக அவ் எரிவாயு சிலிண்டரை உணவக உரிமையாளர், அந்த சிலிண்டரை கொள்வனவு செய்த கடைக்கு கொண்டு சென்று ஒப்படைத்துவிட்டு திரும்பினார்.

இச் செய்தி பரவத் தொடங்கியதும், ஏற்கனவே எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக் கொண்டவர்களும், எரிவாயு சிலிண்டர்களில் சவர்க்கார நீர் தடவி பரிசோதனைகளை செய்ய ஆரம்பித்தனர். பல வீடுகளில் சவர்க்கார நீர் பொங்கவே சமையலறையிலுள்ள எரிவாயு சிலிண்டர்களின் இயக்கம் நிறுத்தப்பட்டு, விறகு மற்றும் மண்ணெண்ணெய் அடுப்புக்களில் சமையல்கள் இடம்பெற்று வருகின்றன.

# எரிவாயுக் கலவையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது

### -லாஃப் எரிவாயு நிறுவனத்தின் பிரதித் தலைவர்

(க.பிரசன்னா)

எரிவாயுவின் தரம் தொடர்பில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையினை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் இலங்கையிலுள்ள எந்த அரச ஆய்வுகூடத்திலும் அதற்கான வசதிகள் இல்லையெனவும் லாஃப் எரிவாயு நிறுவனத்தின் பிரதித் தலைவர் திலக் டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குத் தேவையான எரிவாயுவை முன்பதிவு செய்யும் போதே எரிவாயுவின் கலவை அறிவிக்கப்படுவதால் வாயுவின் கலவையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இலங்கையில் உள்ள எந்தவொரு அரச ஆய்வுகூடத்திலும் தேவையான வசதிகள் இன்மையால் கலவைகளை பரிசோதனைக்கு உட்படுத்த முடியாது. எனினும் இலங்கையில் உள்ள இரண்டு வெளிநாட்டு ஆய்வுகூடங்களில் மாத்திரமே இவற்றை மேற்கொள்ள முடியும்.

அரச ஆய்வுகூடங்களில் ஒரு தொட்டியில் இருந்து பெறப்பட்ட எரிவாயுவினை மாத்திரம் கொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் தவறானவை. இவை சரியான பரிசோதனை அல்ல. ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிசோதனைகளுக்கு கப்பலில் இருந்து வரும் எரிவாயு சிலிண்டரின் மேல், மத்தி மற்றும் கீழ் பகுதிகள் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எரிவாயு சிலிண்டர்களில் புரொப்பேன் மற்றும் பியூட்டேன் ஆகிய கலவைகளின் மாற்றம் ஏற்பட்டாலும் அது இயற்கையாக வெடிக்கும் வாய்ப்புகள் குறைவு எனவும் எனினும் ஏதேனும் காரணங்களுக்காக எரிவாயு கசிவு ஏற்பட்டால் வெடிக்கும் அபாயம் காணப்படுவதாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் எஸ்.டி.எம்.சிந்தக தெரிவித்துள்ளார்.

வெற்று எரிவாயு சிலிண்டர்களுக்கு இந்த நாட்களில் அதிக தேவை உள்ளது. தரமற்ற அல்லது கைவிடப்பட்ட எரிவாயு தொட்டிகளை மீண்டும் பயன்படுத்தினால் இதுபோன்ற வெடிப்புகள் ஏற்படக்கூடும். சிலிண்டர்களின் அழுத்த நிலைமைகளைப் பொறுத்து வெடிக்கும் வாய்ப்புகள் மிகக் குறைவு.

புரொபேன் மற்றும் பியூட்டேன் ஆகியவை காற்றழுத்தத்தை அதிகரிப்பதன் மூலம் திரவமாக்கப்பட்டு எரிவாயு சிலிண்டர்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு புரொப்பேன் திரவமாக்க அதிக அழுத்தம் தேவைப்படுகிறது. எரிவாயு சிலிண்டரானது ஐந்து முதல் ஆறு மடங்கு அழுத்தத்தை தாங்குமளவுக்கு உருவாக்கப்படுகின்றது.

அமெரிக்காவிலுள்ள உள்ள வாயுக்களில் 100 சதவீதம் புரொப்பேன் உள்ளது. அதே வேளை நியூசிலாந்தில் உள்ள வாயுக்களில் 60 சதவீதம் புரொபேன் மற்றும் 40 சதவீதம் பியூட்டேன் உள்ளது. இத்தாலியில் 80 சதவீதம் பியூட்டேன் மற்றும் 20 சதவீதம் புரோபேன் உள்ளது. இங்குள்ள விலைகள் நாட்டுக்கு நாடு மாறுபடும்.

சராசரியாக, ஒரு எரிவாயு சிலிண்டர் இயற்கையாக வெடிக்க 6,000 கிலோபாஸ்கலுக்கும் அதிகமான அழுத்தம் இருக்க வேண்டும். ஒரு எரிவாயு சிலிண்டரில் 100 சதவீதம் புரொப்பேன் இருந்தால், அது 20 டிகிரி செல்சியஸில் திரவமாவதற்கு சுமார் 1000 கிலோபாஸ்கல் அழுத்தம் தேவைப்படும். எரிவாயு சிலிண்டரில் ஒரு பாதுகாப்பு வால்வு உள்ளது மற்றும் வால்வு சுமார் 2500 கிலோபாஸ்கல் அழுத்தத்தில் திறக்கிறது. புரொப்பேன் மற்றும் பியூட்டேன் கலவைகள் கொண்ட எரிவாயு தொட்டியில் அழுத்தம் 1000 கிலோபாஸ்கல் ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவசர சந்தர்ப்பங்களில் தொடர்புகொள்வதற்காக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தால் நுகர்வோருக்கு தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1311 எனும் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு இவ்வாறு தொடர்பு கொள்ள முடியும். மேலும் குறித்த நிறுவனத்தால் நுகர்வோருக்கு புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன் அவை லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

**தேவை**

O+ குருதி வகையைச் சேர்ந்த 27 வயதுடைய ஆண் ஒருவருக்கு O+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத்தேவை. உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஆண், பெண் 20-45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு : 076 8974925, 077 1661476



# பெறுகை அறிவித்தல்

## தனியார் பாதுகாப்புச் சேவை பருத்தித்துறை நகரசபை

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- :- 2021.12.02 - 2021.12.15 வரை மு.ப 9.30 - பி.ப 3.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 2021.12.16 பி.ப 3.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி :- 2021.12.16 பி.ப 3.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பருத்தித்துறை நகரசபை

1.பருத்தித்துறை நகரசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைகளுக்காகக் கோரப்படுகின்றன.
2.சேவைவழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3. மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்படிவக் கட்டணமாக ரூபா 2,000.00 (VAT.NBT நீங்கலாக) இனைச் செலுத்துவதுடன் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா 5,000.00 இனை பணமாக அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
4.கேள்விப் பத்திர ஆவணங்கள் 2021.12.16ஆந் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பருத்தித்துறை நகரசபை, கல்லூரி வீதி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தினுள் உள்ள பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
5.கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாக திறக்கப்படும். அதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
6.கேள்விப்பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் மேல்மூலையில் மூலப் பிரதி, இணைப்பிரதி எனக் குறிப்பிடப்படுவதுடன் கேள்வியின் பெயரும் குறிப்பிடுதல் வேண்டும்
7.கேள்விப் பத்திரங்கள் தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பெறுகைக் குழுத் தலைவருக்கே உரியதாகும்.
8.மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(அலுவலக தொலைபேசி இல:- 0212263213)

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் எண்ணிக்கை | வேண்டப்படும் பாதுகாப்புப் பிணை | |
|---|---|---|---|---|
| | | பகல், இரவு | பாதுகாப்புப் பிணைத் தொகை (மீளளிக்கக் கூடியது) | செல்லுபடியாகும் காலம் |
| 01 | பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பருத்தித்துறை நவீன சந்தைக் கடைத்தொகுதியும் மரக்கறிச் சந்தையும் | 02 (இரண்டு மட்டும்) | 5000.00 | 60 நாட்கள் |

02.12.2021

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
பருத்தித்துறை நகரசபை.



# கேள்வி அறிவித்தல் - 2021
## மன்னார் நகரசபை.

மன்னார் நகரசபைக்குச் சொந்தமான பஸ் நிலையத்திற்கு அருகாமையில் அமையப்பெற்ற கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடைகளினை (பஸ்தரிப்பிடத்திற்கு அருகாமையில் அமையப்பெற்ற - 02) குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 02.12..2021 – 22.12..2021 புதன்கிழமை பி.ப 13..00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 02.12.2021 – 22.12.2021 புதன்கிழமை பி.ப 14.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 22.12.2021- புதன்கிழமை பி.ப 14.30 மணி

1. கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் தனித்தனியான உறைகளில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு "தலைவர். மன்னார் நகரசபை"என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் குறித்த தினத்திற்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லது சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்படிவங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விகோரும் சேவையின் விபரம் குறிப்பிடப்படல் வேண்டும். (கடை இலக்கம் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்)
2. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும். மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகரசபையில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் மன்னாரில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு மட்டுமே கேள்விப் படிவம் வழங்கப்படும். (இதனை கிராம அலுவலரின் சிபாரிசுடனும் பிரதேசசெயலாளரின் அத்தாட்சிப்பத்திரத்துடனும் சமர்ப்பித்தல் வேண்டும்). அத்துடன் தே.அ.அ. நிழற் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப் படிவம் எடுத்து உரிய நேரத்தில் சமர்ப்பிக்காதவர்களுக்கு கேள்வி வைப்புப் பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது. **கடந்த காலக் கேள்விகள் மூலம் சபைக்கு வருமதியான நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும். கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவராவார்கள்.**
4. நகரசபையின் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் கடைகளினை பெறுவோர் எவ்விதத்திலும் கடையினை மூன்றாம் நபருக்கு கைமாற்றம் செய்ய முடியாது. மேலும் அவ்வாறு கைமாற்றம் செய்தால் தங்களுக்கு வழங்கப்பட்ட கடை எவ்வித முன்னறிவித்தலுமின்றி நகரசபையினால் கடைகள் உடன் கையேற்கப்படும் என்பதுடன் செலுத்தப்பட்ட கேள்வித் தொகை மீள வழங்கப்படமாட்டாது.
5. நகரசபையினால் வழங்கப்படும் கடைகளின் அளவுப் பிரமாணங்களில் மாற்றம் செய்வது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.
6. சட்டரீதியற்ற வியாபாரச் செயற்பாடுகளினை மேற்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.
7. மாதாந்த வாடகைத் தொகையானது காலத்திற்கு காலம் மாற்றப்படும் போது குறித்த வாடகையினை செலுத்த இணங்குதல் வேண்டும்.
8. 22.12.2021 புதன்கிழமை பிற்பகல் 14.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். மேலும் கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்குரியதாகும்
9. சித்தியடையும் கேள்விதாரர் தங்களது கேள்வித் தொகையினை சபைக்குச் செலுத்தி குறித்த கடையின் பெயரில் ஒப்பந்தம் செய்து கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் குறித்த கேள்வித் தொகை சபையினால் தங்களுக்கு மீளளிக்கப்படமாட்டாது.
10. கேள்வித் தொகையினை 31.12.2021ஆம் திகதிக்கு முன் முழுமையாக சபைக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் கேள்வித்தொகை செலுத்துவதற்கான மேலதிக கால அவகாசம் வழங்கப்படமாட்டாது.
11. நபர் ஒருவருக்கு கடையொன்றிற்கு ஒரு கேள்விப்படிவம் மட்டுமே வழங்க முடியும்.

* இக்கேள்விகள் சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவையாயின் மன்னார் நகரசபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அட்டவணை

| கடை இல | அளவுப் பிரமாணம் | மீளளிக்கப்படாத பத்திரக் கட்டணம் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | சபையின் குறைந்த கேள்வித் தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| 49 | 7'-6" * 15'-9" | 2,000.00 | 20,000.00 | 1,440,000.00 | 8,000.00 |
| 50 -B | 5'-0" * 15'-0" | 2,000.00 | 20,000.00 | 900,000.00 | 5,000.00 |

G.அன்ரனி டேவிட்சன்
தலைவர்
நகரசபை, மன்னார்.
02.12.2021

# பங்களாதேஷ் அணியை வீழ்த்தி வெற்றிகொண்டது பாகிஸ்தான்





பங்களாதேஷுக்கு எதிராக நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்களால் பாகிஸ்தான் இலகுவாக வெற்றியீட்டியது. முதலாவது இன்னிங்ஸ் நிறைவில் 44 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த பாகிஸ்தான், 2 ஆவது இன்னிங்ஸில் சகல துறைகளிலும் பிரகாசித்து வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

இந்த வெற்றியுடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 0 என்ற ஆட்டக் கணக்கில் பாகிஸ்தான் முன்னிலை வகிக்கின்றது.அத்துடன் ஐசிசி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் 24 புள்ளிளைப் பெற்றுள்ள பாகிஸ்தான் விகிதாசார அடிப்படையில் 66 சதவீத புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. மேற்கிந்தியத் தீவுகளுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றியீட்டிய இலங்கை 100 சதவீத புள்ளிகளுடன் விகிதாசார அடிப்படையில் முதலிடத்தில் இருக்கின்றது. 202 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு நான்காம் நாள் ஆட்டத்தின்போது தனது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான், ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 109 ஓட்டங்களை பெற்றிருந்தது.

வெற்றிக்கு மேலும் 93 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் செவ்வாய்க்கிழமை (30) தனது துடுப்பாட்டத்தைத் தொடர்ந்த பாகிஸ்தான், 2 விக்கெட்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

ஆரம்ப வீரர்களான அபிட் அலி, அப்துல்லா ஷபிக் ஆகிய இருவரும் 151 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

எனினும் இருவரும் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டமிழந்தனர். அபிட் அலி 91 ஓட்டங்களையும் அப்துல்லா ஷபிக் 73 ஓட்டங்களையும் பெற்றனர். அஸார் அலி 24 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் பாபர் அஸாம் 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக் காதிருந்தனர். ஆட்டநாயகன்: அபிட் அலி.

-இலங்கைக்கு எதிரான டெஸ்ட்-

## தொடரை சமப்படுத்துமா? மேற்கிந்தியத்தீவுகள் அணி




காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் 2 ஆவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியின் 2 ஆம் நாளன்று அரைவாசி நாள் ஆட்டம் மாத்திரமே விளையாடப்பட்டபோதிலும் தொடரை சமப்படுத்துவதற்கான மேற்கிந்தியத் தீவுகளின் முயற்சி வெளிப்படத் தொடங்கியுள்ளது.

போட்டியின் இரண்டாம் நாளான நேற்று காலை தனது முதலாவது இன்னிங்ஸை ஒரு விக்கெட் இழப்புக்கு 113 ஓட்டங்கள் என்ற நிலையிலிருந்து தொடர்ந்த இலங்கை, எஞ்சிய 9 விக்கெட்களை 91 மேலதிக ஓட்டங்களுக்கு இழந்து மொத்தமாக 204 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

போர்மோல், வொரிக்கன் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சுகளே இலங்கை துடுப்பாட்ட வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தன.மதிய போசன இடைவேளைக்கு பின்னர் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய மேற்கிந்தியத் தீவுகள் அதன் முதலாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.க்ரெய்க் ப்ரத்வெய்ட், ஜேர்மெய்ன் ப்ளக்வூட் ஆகிய இருவரும் ஆரம்ப விக்கெட்டில் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 62 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஜேர்மெய்ன் 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மழை காரணமாக பிற்பகல் 2.15 மணி அளவில் 2 ஆம் நாள் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது ப்ரெத்வெய்ட் 22 ஓட்டங்களுடனும் நிக்ருமா பொன்னர் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். அதன் பின்னர் ஆட்டம் தொடரவில்லை.

பந்துவீச்சில் ப்ரவின் ஜயவிக்ரம 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தார்.

முன்னதாக நேற்று காலை தனது முதலாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை, மொத்த எண்ணிக்கைக்கு மேலும் 26 ஓட்டங்கள் சேர்ந்தபோது ஒஷத பெர்னாண்டோ 18 ஓட்டங்களுடன் களம் விட்;டகன்றார்.

அதன் பின்னர் இலங்கையின் விக்கெட்கள் சீரான இடைவெளிகளில் விழ, கடைசி 8 விக்கெட்கள் வெறும் 65 ஓட்டங்களுக்கு சரிந்தன.

முதலாம் நாளன்று திறமையாகத் துடுப்பெடுத்தாடிய பெத்தும் நிஸ்ஸன்க 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவரைவிட ஏஞ்சலோ மெத்யூஸ் (29), அறிமுக வீரர் சரித் அசலன்க (10), சுரங்க லக்மால் (12) ஆகிய மூவரே இலங்கை சார்பாக இன்றைய தினம் இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்ற வீரர்களாவர்.முதலாம் நாளன்று திமுத் கருணாரட்ன 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் பந்துவீச்சில் வீராசாமி பேர்மோல் 35 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும் ஜோமெல் வொரிக்கன் 50 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

-இங்கிலாந்து அணிக்கெதிரான-

## இளையோர் சர்வதேச ஒருநாள் போட்டியில் இலங்கை தோல்வி



19 வயதுக்குட்பட்ட இங்கிலாந்து மற்றும் இலங்கை கிரிக்கெட் அணிகள் மோதிக் கொண்ட முதலாவது இளையோர் சர்வதேச ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 25 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இலங்கை அணித்தலைவர், துனித் வெல்லாலகேவின் சகல துறை ஆட்டம் மற்றும் ரனூத சோமரத்ன நிதானமான துடுப்பாட்டம் ஆகியன வீணானது.

இவ்விரண்டு அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட இளையோர் சர்வதேச ஒருநாள் போட்டித் தொடர் கொழும்பு எஸ்.எஸ்.சீ. மைதானத்தில் நேற்று காலை ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய இலங்கை அணித் தலைவர் துனித் வெல்லாலகே முதல் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை இங்கிலாந்துக்கு வழங்கியது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 242 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் வில்லியம் லக்ஸ்டன் (44), ஜேம்ஸ் ரியு (40), ஜேம்ஸ் சேல்ஸ் (28), ஜோர்ஜ் தோமஸ் (27) ஆகியோர் கைக்கொடுத்தனர்.பந்துவீச்சில் துனித் வெல்லாலகே 5 விக்கெட்டுக்களையும், மல்ஷ தருப்பதி, ரவீன் டி சில்வா, மதீஷ பத்திரண, டிரவீன் மெத்தியூ ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

243 ஓட்டங்களை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 473 ஓவர்களில் 217 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 25 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஒரு கட்டத்தில் 90 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இலங்கை அணிக்கு, துனித் வெல்லாலகே மற்றும் ரனூ சோமரத்ன இருவரும் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர்.

நம்பிக்கையளிக்கும் விதத்தில் இந்த ஜோடி தமக்கிடையில் 102 ஓட்டங்களை பகிர்ந்திருந்தபோது, துனித் வெல்லாலகே ஆட்டமிழந்தார். இவர் 68 பந்துகளில் 6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 68 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். இவரின் ஆட்டமிழப்பை அடுத்து, ரனூதவும் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கவே இலங்கை அணியின் வெற்றியீட்டும் கனவு கலைந்தது. துடுப்பாட்டத்தில் இவர்கள் இருவரைத் தவிர ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான, சமிந்து விக்கிரமசிங்க 34 ஓட்டங்களையும், அஞ்சுல பண்டார 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் ஜோவா பொய்டன் 3 விக்கெட்டுக்களையும், டொம் ப்ரெஸ்ட், ரெஹான் அஹமட், ஜோஷ் பேக்கர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தி இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு பங்களித்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட இந்த தொடரில் 19 வயதுக்குட்பட்ட இங்கிலாந்து அணி 1க்கு 0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

## 2021 ஆம் ஆண்டின் சிறந்த கால்பந்து வீரராக மெஸ்ஸி



2021 ஆம் ஆண்டின் சிறந்த கால்பந்து வீரராக மெஸ்ஸி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


சிறந்த கால்பந்து வீரர்களுக்கு வழங்கப்படும் பாலன் டி ஆர் தங்க கால்பந்து விருதை 7 ஆவது முறையாக மெஸ்ஸி பெற்றுள்ளார்.

நடப்பு ஆண்டின் பல்வேறு போட்டிகளின் செயல்பாடுகளுக்கு அமைய மெஸ்ஸிக்கு தங்க கால்பந்து விருது வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் பிரிவில் ஸ்பெயின் வீராங்கனை யுடநஒயை கரவநடடயள தங்க கால்பந்து விருதை தட்டிச் சென்றுள்ளார்.

-2022 ஐ.பி.எல். மெகா ஏலத்திற்கு-

## முன்னதாக அணியில் தக்கவைத்த வீரர்களின் முழு பட்டியல் விபரம்




இந்தியன் பிரீமியர் லீக் டி-20 கிரிக்கெட் தொடரில் எந்தெந்த அணிகளில் யார் யார் தக்கவைப்பு என்பது குறித்த பட்டியல் வெளியாகியுள்ளது. ஐ.பி.எல். 2022 ஆம் ஆண்டு சீசனை முன்னிட்டு மெகா ஏலம் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெறுகிறது.

அதற்காக அணிகள் அதிகபட்சமாக 4 வீரர்களை மட்டுமே தக்க வைத்து கொள்ள முடியும். இதில் அதிகபட்சம் 2 வெளிநாட்டு வீரர்கள் அல்லது 3 இந்திய வீரர்களை ஒவ்வொரு அணியும் தக்க வைத்து கொள்ள முடியும்.

இந் நிலையில் ஐ.பி.எல் கிரிக்கெட்டில் எந்தெந்த அணிகளில் யார் யார் தக்கவைப்பு என்பது குறித்த பட்டியல் வெளியாகியுள்ளது.

சென்னை சூப்பர் கிங்ஸ், டெல்லி கேப்பிடல்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் ஆகிய அணிகள் தலா 4 வீரர்களை தக்க வைத்துக் கொண்டுள்ளன.

ராஜஸ் தான் ரோயல்ஸ், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் தலா 3 வீரர்களையும், பஞ்சாப் கிங்ஸ் 2 பேரையும் தக்கவைத்துள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:-

சென்னை சூப்பர் கிங்ஸ்:

ரவீந்திர ஜடேஜா, எம்.எஸ். தோனி, மொயீன் அலி, ருதுராஜ் கெய்க்வாட், மும்பை இந்தியன்ஸ்: ரோஹித் சர்மா, ஜாஸ்பிரீத் பும்ரா, சூர்யகுமார் யாதவ், கைரன் பொலார்ட், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு: விராட் கோலி, கிளென் மேக்ஸ்வெல், மொஹமட் சிராஜ். டெல்லி கேபிடல்ஸ்: ணிஷப் பந்த, அக்சர் படேல், ரித்வி ஷா அன்ரிச் நோர்க்கியா கொல்கத்தா நைட் ரைடர்ஸ்: ண்ட்ரே ரஸல், வருண் சக்ரவர்த்தி, வெங்கடேஷ் ஐயர், சுனில் நரைன். பஞ்சாப் கிங்ஸ் மயங்க் அகர்வால், அர்ஷ்தீப் சிங், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் கேன் வில்லியம்சன், அப்துல் சமத், உம்ரான் மாலிக். ராஜஸ்தான் ரோயல்ஸ்: சஞ்சு சாம்சன், ஜாஸ் பட்லர், யஷஸ்வி ஜெய்ஸ்வால்.

## சென்னை அணியின் அடுத்த தலைவர் ரவீந்திர ஜடேஜா?




ஐ.பி.எல். 2022 சீசனில் 10 அணிகள் பங்கேற்கின்றன. இதில் 8 அணிகள் தாங்கள் தக்கவைக்கும் வீரர்கள் பட்டியலை அறிவிக்க நேற்று கடைசி நாள் என்பதால் வீரர்கள் தக்கவைப்பு பட்டியலை வெளியிட்டன. அந்த வகையில் நடப்பு சம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் ரவிந்திர ஜடேஜா, எம்.எஸ்.டோனி, ருதுராஜ் கெய்க்வாட், மொயின் அலி ஆகிய 4 வீரர்கள் தக்க வைக்கப்பட்டுள்ளனர். இதில் டோனியை விட அந்த அணியைச் சேர்ந்த சகலதுறை வீரரான ரவிந்திர ஜடேஜா அதிக விலைக்குத் தக்க வைக்கப்பட்டுள்ளார். ஜடேஜாவை இந்திய நாணய மதிப்பில் 16 கோடி ரூபா கொடுத்தும், டோனியை 12 கோடி ரூபா கொடுத்தும், மொயீன் அலியை 8 கோடி, ருதுராஜ் கெய்க்வாட்டை 6 கோடி ரூபா கொடுத்தும் தக்க வைத்துள்ளது அணி நிர்வாகம். இந்த 4 வீரர்களைத் தக்கவைக்க 42 கோடியைச் செலவிட்டுள்ளது சென்னை சூப்பர் கிங்ஸ். இது குறித்துப் கருத்துத் தெரிவித்த சென்னை அணியில் இம்முறை இடம்பிடித்திருந்த ரொபின் உத்தப்பா, முதலில் தக்கவைக்கும் வீரர் என்ற அடிப்படையில் ரவிந்திர ஜடேஜா தக்க வைக்கப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இருந்து டோனி ஓய்வுபெற்ற பிறகு, சென்னை சூப்பர் கிங்க்ஸ் அணியின் அடுத்த கப்டனாக ரவீந்திர ஜடேஜா நியமிக்கப்படுவார் என்பதற்கான அறிகுறிதான் இது. சி.எஸ்.கே. அணியில் ஜடேஜாவின் மதிப்பு டோனிக்கு நிச்சயம் தெரியும், என்று குறிப்பிட்டுள்ளார். மற்றொரு வீரரான பார்த்தீவ் படேல், ஜடேஜா சி.எஸ்.கே. அணியின் அடுத்த கப்டனாக உரிமையாளரால் பார்க்கப்படுகிறார். ஒரு வீரராக ஜடேஜா அசத்திவருகிறார். தேசிய அணியில், டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளார். ஒருநாள் கிரிக்கெட்டிலும் அவர் 6 ஆவது இடத்தில் துடுப்பெடுத்தாடுவதைப் பார்த்தோம். ஜடேஜா கப்டன் பொறுப்பை ஏற்றுக்கொள்வதைப் பார்க்க விரும்புகிறேன். டோனி விளையாடுவதில்லை என்று முடிவு செய்தவுடன் ரவீந்திர ஜடேஜா கப்டனாக பொறுப்பேற்பார் என நான் நினைக்கிறேன், என்று தெரிவித்திருக்கிறார்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கொவிட் கட்டுப்பாட்டு செயற்பாடுகளுக்காக மொத்தமாக 113 பில்லியன் ரூபா செலவு

## -கெஹலிய ரம்புக்வெல தகவல்-



கொரோனா பரவலை கட்டுப்படுத்த அரசாங்கம் பாரிய போராட்டத்தில் முன்னெடுத்துக் கொண்டுள்ளது. அதில் பல தவறுகள் இடம் பெற்றாலும் கூட சவால்களை வெற்றிகொள்ள போராடிக்கொண்டுள்ளோம் என்று சுட்டிக்காட்டிய சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஒட்டுமொத்த கொரோனா கட்டுப்பாட்டு செயற்பாடுகளுக்காக மொத்தமாக 113 பில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவு செய்துள்ளதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த சுகாதார அமைச்சு என நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்:-

நாட்டில் கொரோனா தடுப்பு செயற்பாடுகளை கட்டுப்படுத்த தடுப்பூசி பெற்றுக்கொள்ளவில்லை. அதற்கான பணம் அரசாங்கத்திடம் இல்லையென எதிர்க்கட்சியினர் விமர்சித்துக்கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதி அதற்கு செவி மடுக்காது தடுப்பூசியை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையை எடுத்தார்.

இந்தியாவின் நெருக்கடி மற்றும் ஏனைய சில சிக்கல்கள் காரணமாக எம்மால் தாமதம் ஏற்பட்டது. ஆனால் அதற்காக ஒரு தரப்பை மாத்திரம் நம்பியிருக்காது அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

கொரோனா வைரஸ் தொற்றை தடுக்கும் வேலைத்திட்டம் மற்றும் அதனுடன் சார்ந்த நடவடிக்கைகளுக்காக 113 பில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது.

எமது சுகாதார துறையில் நாம் கடந்த காலம் குறித்து பேசிக்கொண்டிருக்காது எதிர்காலம் குறித்து சிந்திக்க வேண்டும். எதிர்கால கொள்கைகளை வகுக்க வேண்டும். கொவிட் போராட்டத்தை நாம் முன்னெடுத்துக்கொண்டு செல்கின்றோம்.

அதில் குறைபாடுகள் இருந்தாலும் சவால்களை வெற்றிகொள்ள போராடிக் கொண்டுள்ளோம். அதே வேளையில் எதிர்கால சுகாதார திட்டங்கள் குறித்தும் சிந்திக்க வேண்டும். அதற்கான அவதானிப்புகளை செலுத்தியுள்ளோம். மக்களின் பாதுகாப்பு அரசாங்கத்தின் பொறுப்புகளில் ஒன்றாகும்.

மக்களை ஆரோக்கியமான மட்டத்தில் வைத்திருக்கும் வேலைத்திட்டங்களை உருவாக்க வேண்டும், பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காண வேண்டும். துரித வைத்திய சேவைகளை முன்னெடுக்க வேண்டும். இது குறித்து கவனம் செலுத்தி வருகின்றோம்

# இலங்கையில் காணாமல் போன படகு சென்னையில்



வாழைச்சேனையில் இருந்து கடந்த செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன படகு சென்னை காசிமேடு பகுதியில் கரை ஒதுங்கியுள்ளது.

காணாமல் போன குறித்த படகு கடந்த திங்கட்கிழமை இரவு 11.30 மணி அளவில் சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த படகின் மூலம் திருவள்ளூர் மாவட்டம் காட்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அதானி துறைமுகத்தில் உள்ளே நுழைந்துள்ளதாக கடற்தொழில் அமைச்சின் மூலம் தகவல் கிடைத்துள்ளதாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கடந்த செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற குறித்த படகு மீன்பிடித்துக் கொண்டிருக்கும் பொழுது முதல் நாளிலேயே படகு என்ஜின் பழுது ஏற்பட்டு விட்டது என்றும் மேலும் காற்றுவாக்கில் அந்தமான் பகுதிக்கு சென்றதாகவும் நேற்று சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த IND TN 02 MM 2543 என்ற படகின் மூலம் இரவு 11.30 மணிக்கு திருவள்ளூர் மாவட்டம் காட்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அதானி துறைமுகத்தில் உள்ளே நுழைந்துள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனக்கு தொலைபேசியில் தெரிவித்ததாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். காணாமல் போன கடற்றொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகள், மாவட்ட கடற்றொழில் அதிகாரிகள், இந்திய கடலோர காவல்படை அதிகாரிகள் இதனோடு சம்பமந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் தங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

# 19,360 கி.மீ பயணத்தின் பின் நாடு திரும்பியது 'மெனிகே'



புலம்பெயரும் பறவைகள் தொடர்பான ஆய்வொன்றில், எமது நாட்டுக்கு உரித்தான பறவையொன்று 19,360 கிலோமீற்றர் தூரம் பறந்து சென்று மீண்டும் நாட்டை வந்தடைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து ஐரோப்பா, ஆர்க்டிக் வரையில் வடக்கு நோக்கி புலம்பெயர்ந்த குறித்த பறவை சுமார் 20,000 கிலோமீற்றர் தூரம் பயணத்தை நிறைவுசெய்து மீண்டும் இலங்கைக்கு திரும்பியுள்ளது.

மெனிகே என்று பெயரிடப்பட்டுள்ள Heuglin's gull என்ற இந்த பறவை, கடந்த ஏப்ரல் மாதம் தலைமன்னாரிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்திருந்தது.

தலைமன்னாரிலிருந்து ஜீ.பி.எஸ் பொருத்தப்பட்ட மேக மற்றும் மெனிக்கே என்று பெயரிடப்பட்டுள்ள இரண்டு Heuglin's gull இன பறவைகள் விடுவிக்கப்பட்டன.

அவற்றின் மேக உடனேயே வடக்கு நோக்கி இடம்பெயர்வைத் தொடங்கியது, மெனிகே 20 நாட்களுக்கு மன்னாரில் தங்கியிருந்து ஏப்ரல் பிற்பகுதியில் மன்னாரை விட்டு வெளியேறியது.

இலங்கையை விட்டு வெளியேறி ஆறு மாதங்கள், ஒன்பது நாட்களுக்குப் பிறகு கடந்த நவம்பர் 4 ஆம் திகதி மெனிகே மன்னாருக்குத் திரும்பியது. மெனிக்கே மன்னாரிலிருந்து ஆர்க்டிக் வரை சென்று மீண்டும் மன்னார் வரையான தனது முழுப் பயணத்தின் போது 19,360 கிலோமீற்றர் தூரத்தை வியக்கத் தக்க வகையில் கடந்துள்ளது.

இதேவேளை ஐரோப்பா நோக்கி வடக்கு திசையாக பயணித்த மேக தற்போது தெற்கு திசையாக இடம்பெயர்ந்து இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. அது விரைவில் நாடு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# உறங்கிக் கொண்டிருந்த சிறுமி தீ விபத்தில் சிக்கி பலி

வெலிகம, வெவெகெ தரவத்த பிரதேசத்தில் வீடொன்று தீப்பிடித்து எரிந்ததில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த தீ விபத்தில் 8 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் உள்ள ஒரு அறையில் தீ விபத்து ஏற்பட்டு வீட்டின் மேற்கூரை எரிந்து நாசமானது. வீட்டின் அறையில் உறங்கிக் கொண்டிருந்த சிறுமி தீ விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவரது பாட்டியும், 13 வயது சகோதரியும் அருகில் உள்ள அறையில் தூங்கிக் கொண்டிருந்த போது, வீட்டை விட்டு வெளியே ஓடி வந்து உயிர் தப்பியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டவுடன் வெலிகம பொலிஸார் தீயை அணைக்க மாத்தறை தீயணைப்பு வாகனங்களை வரவழைத்துள்ளதாகவும் தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் இருந்த எரிவாயு சிலிண்டர், எரிவாயு அடுப்பு அல்லது மற்ற உபகரணங்களுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# படிப்படியாக அதிகரிக்கும் எயிட்ஸ் நோயாளிகள்

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் கடந்த சில வருடங்களாக எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமத்துவமின்மைக்கு முடிவு கட்டுங்கள், எய்ட்ஸை முடிவுக்குக் கொண்டு வாருங்கள் என்பதுதான் இந்த ஆண்டு எய்ட்ஸ் தினத்தின் கருப்பொருளாகும்

2020 ஆம் ஆண்டில், நாட்டில் 363 புதிய எய்ட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டதாகவும் 2019 இல் பதிவான நோயாளிகளின் எண்ணிக்கை 439 ஆகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஈஸ்டர் தாக்குதல் சந்தேகநபர்களின் உறவினர்களிடம் பணம் பறிப்பு

## -சி.ஐ.டி அதிகாரிகளாக நடித்தவர்களின் தில்லுமுல்லு-

தம்மை சி.ஐ.டி. எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளாக சித்திரித்து, உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கைதானவர்களின் உறவினர்களிடம் கோடிக்கணக்கில் பணம் பறித்து மோசடி செய்ததாக கூறப்படும் இருவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் அவ்விருவரிடமும் விசாரணைகள், தடுப்புக் காவலில் இடம்பெறுவதாக சி.ரி.ஐ.டி. எனப்படும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகேவுக்கு அறிவித்தனர்.

உஹமீய - கெபல்லவ பகுதியைச் சேர்ந்த தோனதுவகே தொன் சமன் புத்திக , ஹெட்டிபொல பகுதியைச் சேர்ந்த மொஹம்மட் ரிஸ்மி, மொஹம்மட் ரிஸ்வான் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டு, பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெற்றுக்கொண்ட தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைத்து விசாரித்து வருவதாக சி.ரி.ஐ.டி.யினர் மன்றுக்கு அறிவித்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மொஹம்மட் ரிஸ்மி மொஹம்மட் ரிஸ்வான் எனும் சந்தேக நபரை மன்றில் ஆஜர் செய்த சி.ரி.ஐ.டி. அதிகாரிகள், அவர் நீதிவானிடம் இரகசிய வாக்கு மூலம் ஒன்றினை வழங்க எதிர்ப்பார்ப்பதாக கூறினர்.

இரகசிய வாக்கு மூலம் வழங்குவது தொடர்பில் ஒன்றுக்கு இரு முறை சிந்தித்து எதிர்வரும் நாளொன்றில் வாக்கு மூலம் வழங்குவதானால் மன்றில் ஆஜராகுமாறு நீதிவான் சந்தேக நபருக்கு ஆலோசனை வழங்கினார்.

# கொட்டகலை தோட்ட தொழிலாளியின் வீட்டில் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை - பத்தனை பெய்திலி தோட்டத்தில் தோட்டத் தொழிலாளியின் வீட்டில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் வெடிப்புச் சம்பவம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

வீட்டில் இருந்த எரிவாயு சிலிண்டரில் பொருத்தப்பட்டிருந்த ரெகுலேட்டர் வெடித்துள்ளதுடன் ரெகுலேட்டரின் துண்டுகளைக் கூட அப்பகுதியில் காண முடியவில்லை மேலும் அதற்கான இறப்பர் குழாயும் முழுமையாக எரிந்துள்ளது.

தோட்ட தொழிலாளிகளான பெற்றோர்கள் தொழிலுக்கு சென்றிருந்த நிலையில் பாடசாலையில் இருந்து வீடு திரும்பிய பெண் பிள்ளை தண்ணீரை சூடாக்குவதற்கு சமையல் அறையில் இருந்த எரிவாயு அடுப்பை பற்றவைத்து விட்டு வீட்டினுள் இருந்த போது பாரிய சத்தத்துடன் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

எரிவாயு அடுப்பு வெடிப்பு மற்றும் தீப்பற்றல் காரணமாக எரிவாயு குக்கர் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் வீட்டின் மின் கட்டமைப்பு மற்றும் பொருட்களும் சேதமடைந்துள்ளன.

சமையலறையில் எவரும் இல்லாததன் காரணமாக எவருக்கும் ஆபத்துக்கள் ஏற்படவில்லை. கடந்த ஞாயிற்றுக்கிழமை கொள்வனவு செய்யப்பட்ட கேஸ் சிலிண்டரே இவ்வாறு வெடித்துள்ளது.

குறித்த நேரத்தில் பெற்றோரும் வீடு திரும்பிய நிலையில் கேஸ் சிலிண்டரை தந்தை தூக்கி வெளியில் வீசி எறிந்ததால் எற்படவிருந்த பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. அத்தோடு, ஒன்றுகூடிய அயலவர்களும் பரவிய தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இவ்விடயம் சம்பந்தமாக குறித்த பகுதிக்கான கிராம உத்தியோகத்தருக்கும் திம்புள்ள - பத்தனை பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


# மரண அறிவித்தல்

பிறப்பு
1930 * 01 * 30



இறப்பு
2021 * 12 * 01

## நாகநாதர் கந்தசாமி

தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் கந்தசாமி நேற்று (01.12.2021) புதன் கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற நாகநாதர் வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேதநாயகியின் அன்புக்கணவரும் அன்னபூரணி, வேலாயுதப்பிள்ளை, காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் செல்லபூரணி, சரவணமுத்து, ஆனந்தராசா, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயதேவி, ஜெயகௌரி, ஜெயராம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலசேகரம், குலராசா ஸ்ரீதேவியின் அன்பு மாமனாரும் அரவிந்தன், பிரதீபா, ஜெயப்பிரகாஷ், பிரசாந், பிரியந்தினி, சுதாகர், நர்மிதா, மயூரன், உமேஷ், ரம்யா, சௌம்யா ஆகியோரின் அன்புப் பேரனும் திவ்யன், மதுரனின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.12.2021 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பளை கொத்தியாழ் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜெயராம்ஸ் இல்லம்
தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை.

தகவல்
குடும்பத்தினர்
00491734491232 (மகன்)
0779184456 (மகள்)



# மீளுருவாக்கப்பட்ட ஆரியகுளம்; தமிழ் மக்களுக்குப் பெருமைதரும் அரிய வரலாற்றுப் பணி

பேராசிரியர்
ப.புஷ்பரட்ணம்

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து வெளிவந்த தமிழ் ஊடகங்கள் தூரநோக்குடன் தமிழ் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்தும் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் அனைவரும் முன்வரவேண்டும் என்ற வேண்டுதலை முன்னெடுத்து வந்திருந்திருப்பதைக் காண முடிகின்றது. அவ்வேண்டுதலில் ஒன்றை நிறைவு செய்திருக்கும் அரிய வரலாற்றுப் பணியாகவே இன்று யாழ்ப்பாண மாநகர சபையால் முன்னெடுத்துள்ள ஆரியகுளம் மீள்புனரமைப்புப் பணியைப் பார்க்கின்றோம்;.

இது யாழ்ப்பாண நகரை அழகுபடுத்தும் இயற்கை சார்ந்த மரபுரிமைச் சின்னம் என்பதற்கு அப்பால் அது யாழ்ப்பாண அரசுகால வரலாற்றையும், பண்பாட்டையும் நினைவுபடுத்திக்காட்டும் மரபுரிமைச் சின்னம் என அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது. ஆரியகுளத்தை யாழ்ப்பாண அரசுடனும், அதன் ஆட்சியாளருடனும் தொடர்புபடுத்திக் கூறும் போது ஆரியகுளம் என்ற பெயர் எவ்வாறு வந்தது?, எப்போது வந்தது?, எந்த மன்னன் காலத்திற்கு உரியது? இக்குளம் யாருக்குச் சொந்தமானது? என்பன தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களும், பல கேள்விகளும் மக்களிடமும், வரலாற்று ஆர்வலர்களிடமும் நீண்டகாலமாக இருந்து வருவதை நாம் அறிவோம் அதுவும் இக்குளத்தின் மீளுருவாக்கப் பணி தொடங்கிய காலத்தில் இருந்து இவ்வாறான கேள்விகள் ஊடகங்கள் பலவற்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு வந்ததையும் காணமுடிகின்றது. இந்த வரலாற்று மயக்கத்திற்கு ஆரியகுளம் என்பதன் முன்னொட்டுச் சொல்லாக வரும் ஆரிய(ர்) என்ற சொல் பயன்பாட்டிலிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். இதற்கு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் அண்மையில் பொருத்தமான பதிலையும், விளக்கத்தையும் வழங்கியிருந்ததுடன் இதையிட்டு வரலாற்று ஆசிரியர்கள் மௌனமாக இருக்கிறார்கள் என்ற தனது நியாயமான ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். அவரின் கருத்திற்கு மேலும் நம்பகமான சான்றுகளையும், விளங்கங்களையும் எடுத்துக் கூறுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆரியச்சக்கரவர்த்திகளும் ஆரியகுளமும்

தமிழகத்தில் சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுச்சியடைந்த இரண்டாம் பாண்டியப் பேரரசு அதன் சமகாலத்தில் தென்னிலங்கையிலும், வடஇலங்கையிலும் ஆறு தடவைகளுக்கு மேல் படையெடுத்து பற்றி அவர்கள் வெளியிட்ட சாசனங்கள் கூறுகின்றன. இப்படையெடுப்புக்களின் தளபதிகளாக, இருந்தவர்களே ஆரியச்சக்கரவர்த்திகள், சக்கரவர்த்திகள்; என்ற பட்டத்தையும் பெற்றிருந்தனர். இப்பட்டங்களை படைத்தளபதிகள் அல்லது சேனாதிபதிகள் மட்டுமன்றி அரச நிர்வாகத்தில் உயர்பதவிகளில் இருந்தவர்களும் பெற்றிருந்தனர் என்பதனைப் பாண்டியர்காலச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன. அவற்றுள் இலங்கைமீது படையெடுத்த ஆரியச்சக்கரவர்த்திகள் யார்? எந்த நாட்டவர்? எந்த அரச வம்சத்திற்கு உரியவர்கள்? எந்த மொழிக்குரியவர்கள்? என்பன தொடர்பான கேள்விகளுக்கு விடைகூறுவதாகவே சிங்கள வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான சூளவம்சத்தில் வரும் பின்வரும் கூற்றுக்கள் காணப்படுகின்றன:

முன்பு பஞ்சம் ஒன்று நிலவியகாலத்திலே பாண்டிய இராச்சியத்தில் ஆட்சிபுரிந்த சகோதரர்களான ஐந்து மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பெயர் கொண்ட தமிழ்ச் சேனாதிபதியின் தலைமையில் படையொன்றை அனுப்பி வைத்தார்கள். அவன் ஆரியனல்லனாயினும் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட பிரதானியாக விளங்கினான். இராச்சியத்தின் எல்லாப் பக்கங்களையும் அழித்துவிட்டு அரண்கள்; பொருந்திய சுபபட்டணத்துள் (யப்பகூவாவிற்குள்) அவன் புகுந்தான். அங்கிருந்த தந்ததாதுவையும், விலைமதிக்கமுடியாத செல்வங்களையும் கவர்ந்து கொண்டு ஆரியச்சக்கரவர்த்தி பாண்டிநாட்டுக்குச் சென்றான். அங்கு பாண்டிய மன்னர் குலமெனும் தாமரையை மலர்விக்கின்ற கதிரவனையொத்த குலசேகர மன்னனுக்கு அவற்றைக் கொடுத்தான். மேற்கூறப்பட்ட கூற்றிலிருந்து ஆரியச்சக்கரவர்த்திகள் ஆரியர்கள் அல்லாத தமிழர் என்று கூறப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. தமிழ்ப் பேரகராதியில் ஆரியன் என்ற சொல்லுக்கு தலைவன், பிராமணன் என்ற பொருள்களும் உள்ளன. .

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வடஇலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட இன்னொரு படையெடுப்பு பற்றிய விரிவான செய்திகளை தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியாமலையிலுள்ள 1262 ஆண்டுக்குரிய பாண்டியரது கல்வெட்டு கூறுகின்றது. அக்கல்வெட்டில் தென்னிலங்கையிலும், வடஇலங்கையிலும் இரு அரசுகள் இருந்ததாகவும், சிங்கள அமைச்சன் ஒருவனது வேண்டுதலின் பேரில் பாண்டியர் வடஇலங்கைமீது படையெடுத்து ஆட்சியில் இருந்த சாவகனை அடிபணிந்து திறைசெலுத்துமாறு கோரியபோது அதை அவன் ஏற்க

> யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் என்ற அதே பெயர் தென்தமிழகத்தில் ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் பெயராக இருப்பது யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியை நினைவுபடுத்த தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் (1913ஆம் ஆண்டு) ஈழநாடும் தமிழ்ச் சங்கமும் என்ற நூலில் அமரர் முத்துத் தம்பிப்பிள்ளை அவர்கள் குணபூஸணசிங்கையாரியனின் அமைச்சன் ஒருவன் ஆற்றிய பணிகள் பற்றி விரிவாகக் கூறும் போது குணபூஸணசிங்கையாரியனின் பெயரில் ஆரியகுளமும், அவனது மனையும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

மறுத்ததால் அவனைக் கொன்று அவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திவிட்டு இந்த வெற்றியின் நினைவாக தமது அரச இலட்சனையான இரட்டைக்கயல் (மீன்கள்) பொறித்த கொடிகளை கோணமாமலையிலும், திரிகூடகிரியிலும் (திருகோணமலையில்) ஏற்றிவிட்டுத் திரும்பியதாகக் கூறுகின்றது. ஆயினும் இந்த வெற்றியைத் தொடர்ந்து தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் சாவகனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திய பாண்டியப்படைகளே அவனை அகற்றிவிட்டு கி.பி.13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தனர். இதனால்; இவ்வரசு பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களில் ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு என்றே அழைக்கப்படுகின்றன. இதனால் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த தொடக்ககால மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என்பதை ஒரு வம்சப் பெயராகக் கொண்டு தமது பெயருடன் ஆரியன் என்ற பெயரையும் இணைத்துக் கொண்டனர். இதற்கு யாழ்ப்பாணவைபவமாலையில் கூறப்பட்டுள்ள குலசேகர சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன், குணபூஷண சிங்கையாரியன், செயவீர சிங்கையாரியன், குணவீர சிங்கையாரியன், கனகசூரிய சிங்கையாரியன் முதலான எட்டு மன்னர்களின் பெயர் களைக் குறிப்பிடலாம் மேலும் ஆரியச்சக்கரவர்த்தி மன்னன் ஒருவன் கம்பளை அரசு மீது படையெடுத்தது பற்றிய தமிழ்க் கல்வெட்டொன்று தென்னிலங்கையில் கொண்டஃகம என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டிலும் படையெடுத்த மன்னனை பொங்கொலி நீர்ச் சிங்கையாரியன் என்றே கூறப்பட்டுள்ளது. இது மேலும் யாழ்ப்பாணவைபவமாலையில் சொல்லப்பட்ட செய்தியை உறுதிசெய்வதாக உள்ளது. இவ்வாதாரங்கள் யாழ்ப்பாண அரசுகால மன்னர்களின் பெயர்களுடன் ஆரியன் என்ற சொல்லும். இணைந்துள்ளதைக் காட்டுகின்றது. .

ஆரியச்சக்கரவர்த்திகளால் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாண அரசைக் காலப்போக்கில் சுதேச மன்னர்களும் ஆட்சி செய்தனர் இவ்வரசு போர்த்துக்கேயரால் வெற்றி கொள்ளப்படும் வரை (1619 இல்) ஏறத்தாழ 350 ஆண்டுகள் சுதந்திர தமிழரசாக ஆட்சியில் இருந்துள்ளது. இவ்வரசின் வரலாற்றை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சி.பத்மநாதன் இலங்கைத் தமிழர் பண்பாடு தனித்துவமாக வளர்வதற்கு யாழ்ப்பாண அரசு ஒரு முக்கிய காரணம் எனக் கூறியிருப்பதுடன் அவ்வரசு காலத்தில் தமிழ் மொழி, சைவசமயம், இலக்கியம், இசை, நடனம், நாடகம், சோதிடம், வைத்தியம், விவசாயம், வெளிநாட்டு வர்த்தகம், இராணுவக்கட்டமைப்பு என்பனவும் வளர்ச்சியடைந்திருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த ராஜாவலிய என்ற சிங்கள வரலாற்று இலக்கியம் சமகாலத்தில் ஆட்சியிலிருந்த றைகம, கம்பளை, யாழ்ப்பாண அரசுகள் பற்றிக்குறிப்பிட்டு; அவற்றுள் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசே படைப்பலத்திலும், பொருளாதார வளத்திலும் மேலோங்கி இருந்ததாகவும் அவ்வரசு மலைநாடு தொட்டு தாழ்நிலப் பகுதிவரை ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறை பெற்றதாகவும் கூறுகின்றது.

பொதுவாக ஒரு நாட்டில் அல்லது ஒரு வட்டாரத்தில் ஆட்சி புரிந்த அரச வம்சங்கள் மற்றும் ஆட்சியாளர்களின் பெயர்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடப்பெயர்களுடனும், அவர்களது வரலாற்றுப் பணிகளுடனும் இணைத்து பேசப்படுவதுண்டு. இவ்வாறான வரலாற்று நினைவுகள் பிற்காலத்தில் தொடர்ந்ததற்கும், காலப்போக்கில் மறைந்ததற்கும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இங்கே யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகள் தமிழகத்தில் இராமநாதபுரச் செவ்விருக்கை நாட்டு ஆரியச் சக்கரவர்த்தி நல்லூரை வாழ்விடமாகக் கொண்டவர்கள் எனப் பாண்டிய சாசனங்களும், பிற வரலாற்று மூலங்களும் உறுதிசெய்கின்றன. இவர்கள் இராமேஸ்வரம் சேதுதலத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்ததால் இவர்கள் சேதுகுலம் எனவும் அழைக்கப்பட்டனர். இச்சேதுகுலத்தையும், சேது தலத்தையும் நினைவுபடுத்தும் வகையில் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகள் தாம் வெளியிட்ட நாணயங்களிலும், கல்வெட்டுக்களிலும், அரச கொடிகளிலும் சேதுவை ஒரு மங்கல மொழியாகப் பயன்படுத்தினர். இச்சொல் இன்றும் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகளின் முக்கிய வரலாற்று அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது. மேலும் ஆரியச்சக்கரவர்த்திகள் வாழ்ந்த தென்தமிழகத்தில் அதிலும் குறிப்பாக பாண்டியரின் ஆதிக்கம் நிலவிய இடங்களில் ஆரியகுளம், ஆரிய நல்லூர், ஆரியச்சக்கரவர்த்தி நல்லூர், ஆரியகவுண்டனூர், ஆரியக்கவுண்டன் வளவு முதலான பெயர்கள் பரந்த பிரதேசத்திற்குரிய இடப்பெயர்களாக உள்ளன. வரலாற்றுப் பழமை வாய்ந்த இவ்விடப்பெயர்கள் தற்காலத் தமிழகத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் பெயர்களாகவும் இருந்துவருகின்றன. இப்பெயர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்ததன் காரணமாகத் தோன்றியவை எனக் கூறப்படுகின்றது. அதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் என்ற அதே பெயர் தென்தமிழகத்தில் ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் பெயராக இருப்பது யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியை நினைவுபடுத்த தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் (1913ஆம் ஆண்டு) ஈழநாடும் தமிழ்ச் சங்கமும் என்ற நூலில் அமரர் முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் குணபூஸணசிங்கையாரியனின் அமைச்சன் ஒருவன் ஆற்றிய பணிகள் பற்றி விரிவாகக் கூறும் போது குணபூஸணசிங்கையாரியனின் பெயரில் ஆரியகுளமும், அவனது மனையும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் இம்மன்னன் காலத்திலேயே 63 நாயன்மார்களுக்கு நாயன்மார்கட்டில் ஆலயம் அமைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். அண்மையில் நாயன்மார்கட்டு ஆலயத்திருக்குளம் மீளுருவாக்கம் செய்யப்பட்ட போது ஒரு அரிய தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டு அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு காலத்தால் சற்றுப் பிற்பட்டதாக இருப்பினும் அக்கல்வெட்டில் இவ்வாலயத் திருக்குளத்தை அமைத்தவன் சிங்கையாரியன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாதாரங்களை வைத்துப் பார்க்கும் போது ஆரியகுளம் என்ற பெயர் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியை நினைவுபடுத்திக் காட்டும் ஒரு மரபுரிமைச் சின்னம் என்பது உறுதியாகத் தெரிகின்றது. இதை மறுதலித்துக் கூறுவதற்கு வேறு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை.



மரபுரிமைச் சின்னம் என்பது அது சார்ந்த இனத்தின், பண்பாட்டின் அடையாளம், ஆணிவேர் எனப் பார்க்கப்படுகின்றது.. விலைமதிக்க முடியாத இம்மரபுரிமைச் செல்வத்துக்களைச் சிறிதும் பிசகாமல். எதிர்கால சந்ததியிடம்; கையளிக்க வேண்டிய நம்பிக்கை நாற்றுக்களாவும் இவை காணப்படுகின்றன. தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எமது மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் ஒருமித்த கருத்துக்கள் இருப்பதையே காணமுடிகின்றது. இது அவர்களுடன் எனக்குள்ள நீண்டகாலத் தொடர்பின் வெளிப்பாடு. இன்று நிறைவு பெற்றுள்ள ஆரியகுளமீளுருவாக்கம் என்பது எமது மரபுரிமைச் சின்னங்களை நாமே பாதுகாக்கமுடியும் என்பதன் ஒரு அடையாளமாகவும், தொடக்கப்புள்ளியாகவும் பார்க்கப்படலாம். எதிர்காலத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஆரியகுள மீளுருவாக்கப் பணி ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதே அனைத்துத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.



# தமிழகம் வரும் விமானப் பயணிகளுக்கு பி.சி.ஆர் பரிசோதனை கட்டாயம்



ஒமிக்ரோன் வைரஸ் அச்சுறுத்தலினால், விமானம் மூலம் தமிழகத்திற்கு வருகை தரும் பயணிகளுக்கு பி.சி.ஆர் பரிசோதனை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

உருமாறிய புதிய கொரோனா வைரஸ், தென் ஆபிரிக்காவில் கடந்த மாதம் கண்டறியப்பட்டமை உலகை பெரும் பீதியில் ஆழ்த்தியுள்ளது. இதற்கு காரணம், இதுவரை கண்டறியப்பட்டுள்ள உருமாறிய வைரஸ்களான ஆல்பா, பீட்டா, காமா, டெல்டா வைரஸ்களை விட இந்த புதிய உருமாறிய வைரஸ், அதி பயங்கரமானது என்பதுடன், 50 முறை உருமாற்றம் கொண்டுள்ளதாக, மருத்துவ விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

ஒமிக்ரோன் என இந்த வைரஸிற்கு, உலக சுகாதார அமைப்பு பெயரிட்டு, அதன் நிபுணர் குழுவினர் இதனை இரவு பகலாக ஆராய்ந்து வருகின்றனர். இந்த ஒரு வார காலத்திற்குள் ஒமிக்ரோன் வைரஸ், 14 நாடுகளில் காலத்தடம் பதித்து, உலகையே அச்சுறுத்தி வருகின்றது. இந்த வைரஸினால், இந்தியாவில் 3-வது அலை ஏற்படக்கூடுமென, தேசிய தடுப்பூசித் திட்டத்தின் ஆலோசகர் டாக்டர் நரேஷ் புரோகித் எச்சரித்துள்ளார்.

இறுதியாக வெளியான ஆய்வுகளின் அடிப்படையில், ஆபத்தில் உள்ள நாடுகளென அறியப்பட்டுள்ள, இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள், தென் ஆப்பிரிக்கா, பிரேசில், வங்காளதேசம், போட்ஸ்வானா, சீனா, மொரீசியஸ், நியூசிலாந்து, ஸிம்பாப்வே, சிங்கப்பூர், ஹொங்ஹொங் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளிலிருந்து வருவோருக்கு, கடுமையான கட்டுப்பாடுகளை கடந்த ஞாயிற்றுக்கிழமை மத்திய அரசாங்கம் அறிவித்தது.

பரிசோதனைகளை அதிகரிக்கவும், கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும், சுகாதார வசதிகளை அதிகரிக்கவும், மாநிலங்களை வலியுறுத்தியது.இந்நிலையில், இந்தியாவில், 12 நாடுகளிலிருந்து வருவோருக்கு பயணக்கட்டுப்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தமிழக விமான நிலையங்களிலும், பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக சுகாதாரத்துறை, விமான நிலையங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில், 12 நாடுகளிலிருந்து வருகை தரும் பயணிகளை 14 நாட்கள் கண்காணிப்பில் வைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

12 நாடுகளின் பட்டியலில், தென்கிழக்கு ஆசிய நாடுகளான தென்னாப்பிரிக்கா, பிரேசில், இங்கிலாந்து, வங்கதேசம் மொரீஷியஸ், போட்ஸ்வானா, நியூசிலாந்து, ஜிம்பாப்வே, சிங்கப்பூர், ஹாங்காங், சீனா, இஸ்ரேல் ஆகியவை உள்ளன.

இந்த 12 நாடுகளிலிருந்து, இந்தியாவிற்கு வரக்கூடிய சர்வதேச விமானப் பயணிகளுக்கு விமான நிலைய வளாகத்திலேயே, பி.சி.ஆர் பரிசோதனை கட்டாயமெனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. பரிசோதனை முடிவுகள் கிடைக்கும் வரை, விமான நிலைய வளாகத்திலேயே, அவர்களை தனிமைப்படுத்த வேண்டுமெனவும், எதிர்மறை முடிவு பெறப்பட்டாலும் கூட, அதன் பின் அவர்கள் தங்களை, அடுத்த 7 நாட்கள் வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்சித் தலைமையை விமர்சித்த அன்வர் ராஜா அ.தி.மு.க. விலிருந்து அதிரடியாக நீக்கம்



அதிமுகவின் மூத்த தலைவர்களில் ஒருவரும், அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை வகித்தவருமான அன்வர் ராஜா, அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அன்வர் ராஜா, எம்ஜிஆர் அதிமுகவை ஆரம்பித்த காலத்திலிருந்து அதிமுகவில் பயணித்து வரும் மூத்த தலைவர் ஆவார்.

ஜெயலலிதா மறைவிற்குப் பின்னர்; சசிகலா ஆதரவாளராக இருந்து வரும் இவர், அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓபிஎஸ் தர்மயுத்தம் நடத்தியதையும், கூட்டணிக் கட்சியான பாஜகவை பல்வேறு சமயங்களிலும் கடுமையாக விமர்சித்தவர். இவர் ஓபிஎஸ் - இபிஎஸ் இரட்டைத் தலைமையிலான அதிமுகவில் அங்கத்துவம் வகித்து வந்தாலும், குடியுரிமை திருத்தச் சட்ட எதிர்ப்பு, சசிகலாவை மீண்டும் கட்சியில் சேர்க்குமாறு, வலியுறுத்தியது, மாநிலங்களவை பதவி கிடைக்காதது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில், தற்போதுள்ள தலைமை மீது அதிருப்தியில் இருந்து வந்தார்.

இவர் 'தற்போதைய அதிமுக தலைமை வலிமையற்று உள்ளதெனவும், வலுப்படுத்த சசிகலா வர வேண்டுமென, அண்மையில் பேசியது பரபரப்பை ஏற்படுத்தியிருந்த சூழலில்,

கட்சிக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக நடந்து கொண்ட அன்வர் ராஜா மீது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென, கூட்டத்தில் வலியுறுத்தப்பட்ட நிலையில், அவர் மன்னிப்புக் கோரியதையடுத்து, பிரச்சினை முடிவுக்கு வந்தது.

ஆனாலும், தொடர்ந்து கட்சியையும், தலைமையையும் விமர்சனம் செய்தபடி இருந்து வரும் அன்வர் ராஜா, அதிமுக செயற்குழுவில் பங்கேற்க கூடாதென, முன்னாள் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் அழுத்தம் கொடுத்ததின் விளைவாக, அவர் அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

## டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் தீ விபத்து

தலைநகர் டெல்லியிலுள்ள, இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுக் காலை திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் உள்ள அறை எண் 59-இல், ஏற்பட்ட தீ விபத்து குறித்து, தீயணைப்புத்துறைக்கு தகவல் வழங்கப்பட்டது.

துரிதமாகச் செயற்பட்ட தீயணைப்புத்துறையினர், நாடாளுமன்ற அறையில் பற்றியெரிந்த, தீயை அணைத்தனர். இந்த தீவிபத்தில் யாருக்கும் எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை.

ஆனால், இந்த தீவிபத்தில் நாடாளுமன்ற அறையிலிருந்த சில கோப்புகள் எரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சபரிமலையில் அதிகரிக்கப்படும் விற்பனை மையங்கள்



தற்போது சபரிமலைக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில், சன்னிதானத்தில் அப்பம், அரவணை விற்பனை மையங்களை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சன்னிதானத்தில் ஐயப்ப பக்தர்களின் வசதிக்காக கூடுதலாக 2 விற்பனை மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 8 விற்பனை மையங்களில் அப்பம் மற்றும் அரவணை என்பன விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அபிஷேகத்திற்கான நெய்யினை பக்தர்களிடமிருந்து பெறுவதற்காக, சன்னிதானத்தில் கோவிலின் பின் புறத்திலும், வடக்குப் பகுதியிலும் ஒவ்வொன்று வீதம், 2 மையங்கள் செயற்பட்டு வருகின்றன.

பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென்பதால், அப்பம், அரவணை விற்பனை மையங்களை அதிகரிப்பது குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படுமெனவும், ஐயப்ப பக்தர்கள், இணையம் மூலம் காணிக்கை செலுத்துவதற்கு வசதியாக நிலக்கல், சன்னிதானத்தில் சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

## உத்தரப் பிரதேசத்தில் ஆட்சியைத் தக்கவைக்க புதிய வியூகங்களை வகுக்கும் பாரதீய ஜனதா கட்சி



உத்தரபிரதேச மாநிலத்தில், அடுத்த வருடம் சட்டசபை தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், மீண்டும் ஆட்சியைத் தக்க வைப்பதற்கு, பாரதீய ஜனதா புதிய வியூகங்களை வகுத்து வருகின்றது.

300ற்கும் மேற்பட்ட இடங்களைக் கைப்பற்றுவதற்கு, கட்சி திட்டமிட்டுள்ளது. கடந்த 2017-ம் ஆண்டு நடந்த சட்டசபைச் தேர்தலின் போது, பாரதீய ஜனதா பரிவர்த்தன யாத்திரை 4 கட்டங்களாக நடத்தப்பட்டது. இது கட்சிக்கு, கைமேல் பலனைக் கொடுத்தது. இதே போல், இந்தத் தேர்தலிலும் 6 பிரமாண்டமான யாத்திரையை நடத்துவதற்கு, பாரதீய ஜனதா முடிவு செய்துள்ளது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், லக்னோவில் நடைபெற்றது.

இதில், உத்தரப் பிரதேச சட்டசபைத் தேர்தல் வெற்றி வாய்ப்புகள் குறித்தும், அதிக இடங்களை கைப்பற்றுவது எப்படி என்பது குறித்தும், விரிவாக ஆலோசிக்கப்பட்டதாக, அந்த மாநில பாரதீய ஜனதா கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உத்தரப் பிரதேசத்தில், இடம் பெறவுள்ள தேர்தலையொட்டி, இம்மாதத்தில் வாரம் ஒருமுறை பிரதமர் மோடி, அம் மாநிலத்திற்குச் சென்று, பல்வேறு திட்டங்களை ஆரம்பித்து வைக்க இருக்கின்றார். எதிர்வரும் 7 ஆம் திகதி அவர் கோரக்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனையை திறந்து வைக்கவிருக்கிறார்.

இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் 13 ஆம் திகதி வாரணாசி செல்லும் பிரதமர் மோடி, அங்கு 2 நாட்கள் தங்கியிருந்து, பல்வேறு திட்டப்பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

21 ஆம் திகதி பல்ராம்பூர் மற்றும் பல இடங்களில் புதிய திட்டங்களை அவர் அறிமுகம் செய்கிறார் என்பதுடன், 28 ஆம் திகதி கான்பூரில் மெட்ரோ திட்டத்தையும், பின்னர் மீரட்டில் மேற்கு உத்தரபிரதேசம் மற்றும் பிரயாத் ராஜ் பகுதியை இணைக்கும் வகையில், கங்கா எக்ஸ்பிரஸ் சாலைக்கும், அவர் அடிக்கல் நாட்டி வைக்கவிருப்பதாகவும், தகவல்கள் தெரிவிக்கின்றன.

## குழந்தையை தண்டித்த மனைவியை கத்தியினால் குத்திய கணவன்

குழந்தை சரியாகப் பாடம் படிக்காமையினால், கண்டித்த மனைவியை, அவரது கணவர் கத்தியால் குத்திய சம்பவம், பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மும்பையின் சாஸ்திரி நகரைச் சேர்ந்த அவினாஷ் வர்பே - ஜெயஸ்ரீ தம்பதிகளுக்குத் திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர். இதற்கிடையில், அவினாஷ் வர்பேக்கும் அவரது மனைவி ஜெயஸ்ரீ க்கும் இடையே சிறுசிறு பிரச்சினைகளுக்காக, அவ்வப்போது சண்டை வருவது வழக்கமாகும்.


இந்நிலையில், திங்கட்கிழமை இரவு ஜெய ஸ்ரீ தனது குழந்தைகளுக்கு வீட்டுப்பாடம் கற்றுக்கொடுத்துள்ளார். அப்போது, குழந்தை சரியாகப் பாடம் கற்காமல் இருந்துள்ளது. இதனால், குழந்தையை ஜெய ஸ்ரீ அடித்துள்ளார். அப்போது, வீட்டில் இருந்த கணவர் அவினாஷ் தனது மனைவி குழந்தைகளை அடிப்பதனால், கடுமையாக ஆத்திரமடைந்துள்ளார். இதனால், இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வாக்குவாதம் முற்றிய நிலையில், மனைவி ஜெய ஸ்ரீயை, அவினாஷ் கத்தியினால் பல முறை, சரமாரியாக குத்தினார். குழந்தைகள் கண்முன்பாக நடந்த இந்தச் சம்பவத்தில், ஜெய ஸ்ரீயின் கழுத்து மற்றும் வயிற்றுப் பகுதியில், கத்தியினால் குத்தப்பட்ட ஜெய ஸ்ரீ, இரத்த வெள்ளத்தில் சரிந்தார்.

ஜெய ஸ்ரீயின் அலறல் சத்தம் கேட்ட அயலவர்கள், பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். பொலிஸார் வருவதற்கு முன்னரேயே, மனைவியை பல முறை கத்தியால் குத்திய அவினாஷ், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். இரத்த வெள்ளத்தில் உயிருக்கு ஆபத்தான நிலையிலிருந்த ஜெய ஸ்ரீயை மீட்டு, அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். அவருக்கு தொடர்ந்தும் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

















### -உயர்நிலை பள்ளியில் துப்பாக்கிச் சூடு-

# 3 மாணவர்கள் பரிதாபகரமாக மரணம்; தாக்குதல் நடத்திய மாணவன் கைது




அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் கொல்லப்பட்டதுடன், மேலும் 6 பேர் காயமடைந்தனர்.

இந்தக் கொடூரமான தாக்குதலை நடத்திய 15 வயது மாணவனை பொலிஸார் கைது செய்துள்ளனர். அமெரிக்காவின் டெட்ராய்ட் நகர் அருகே உயர்நிலைப் பள்ளியிலேயே, துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் 3 மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதுதவிர, 6 பேர் காயமடைந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர், அந்தப் பள்ளியின் ஆசிரியர் ஆவார். அவர்கள் அனைவரும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில், துப்பாக்கி சூடு சம்பவத்தில் தொடர்புடைய, ஒக்ஸ்போர்ட் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த, 15 வயதுடைய மாணவனை பொலிஸார் விசாரணைக்கு அழைத்து சென்றுள்ளதுடன், அவனிடமிருந்த துப்பாக்கியை பறிமுதல் செய்துள்ளனர். பொலிஸாரின்; கைது நடவடிக்கைக்கு மாணவன் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையெனவும், மேலதிக விசாரணைகள் நடைபெறுவதாகவும், அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உலகளவில் இணையத்தளத்தைப் பயன்படுத்தாத 300 கோடி மக்கள்

### -ஐ.நா.வின் ஆய்வுகளில் வெளியான தகவல்-




உலகில் வளர்ந்து வரும் நாடுகளில் 96 சதவீதம் பேர் இணைய வசதி இணைப்புக்களைப் பெறவில்லையென, ஐ.நா தொலைத் தொடர்பு ஒன்றியத்தின் ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

வேகமாக வளர்ந்து வரும் உலகில் இணையத்தள சேவை முக்கிய பங்கு வகிக்கின்றது. கடந்த சில ஆண்டுகளில் இணையத்தளம் அதீத வளர்ச்சியடைந்துள்ளது.

உலகளவில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பல்வேறு காரணங்களுக்காக இணையத்தளத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால், ஆண்டுதோறும் இணையத்தளம் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும், நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக, இணையத்தளம் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 2019-ம் ஆண்டில் 4.1 பில்லியனாக இருந்த நிலையில்,கொரோனா பரவலினால், இந்த வருடம் 4.9 பில்லியனாக உயர்ந்துள்ளது. உலகளவில் இப்படிப்பட்ட வளர்ச்சி இருக்கும் போதிலும், உலக மக்கள் தொகையில், சுமார் 300 கோடி மக்கள் இன்னும் இணையத்தளத்தைப் பயன்படுத்தியதே இல்லையென, ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.டி.யு வின் பொதுச் செயலாளர் ஹவுலின் ஜாவோ தெரிவிக்கும் போது, உலகளவில் விடுபட்ட 300 கோடி மக்களுக்கும், இணைய வசதிகளைக் கொண்டு வருவதற்கான பணிகளில் தாடங்கள் ஈடுபட்டுள்ளதாகவும், இதில், எவரும் பின்தங்கி இருக்கக் கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருப்பதாகவும், தெரிவித்தார்.

## ஜப்பான் பெண்ணுக்கு பிரான்ஸ் நீதிமன்றம் சர்வதேச பிடியாணை



பிரான்ஸ் நாட்டவர் ஒருவரின் மனைவியான, ஜப்பான் நாட்டுப் பெண் ஒருவர் மீது, பரீஸ் நீதிமன்றம் சர்வதேசப் பிடியாணையைப் பிறப்பித்துள்ளது.

பிரான்ஸ் நாட்டவரான வின்சன்ட் பிக்கோ என்பவர், டோக்கியோவில் ஒலிம்பிக் விளையாடுப் போட்டிகள் நடைபெற்றபோது, விளையாட்டு மைதானம் அருகில் உண்ணாவிரதம் இருந்துள்ளார். விடயம் என்னவென்றால், இவரின் மனைவி ஒரு ஜப்பான் நாட்டுப்பெண். தம்பதியருக்கு 6 வயதில் ஒரு மகனும், 4 வயதில் ஒரு மகளும் உள்ளனர்.

இந்நிலையில், அந்தப் பெண், தம்பதியரின் பிள்ளைகள் இருவரையும் கடத்திச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்றது. அத்துடன், பிள்ளைகளைப் பார்க்கவும் வின்சன்ட் அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில், அந்தப் பெண், தம்பதியரின் பிள்ளைகள் இருவரையும் கடத்திச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்றது. அத்துடன், பிள்ளைகளைப் பார்க்கவும் வின்சன்ட் அனுமதிக்கப்படவில்லை. இந் நிலையில், பரீஸ் நீதிமன்றம் அந்தப் பெண்ணுக்கு சர்வதேச பிடியாணையைப் பிறப்பித்துள்ளது.

## ஜப்பான் நாட்டிற்குள்ளும் அடியெடுத்து வைத்தது ஒமிக்ரான் வைரஸ்



தென் ஆபிரிக்காவில் கடந்த மாதம் கண்டறியப்பட்டுள்ள உருமாறிய கொரோனாவான ஒமிக்ரான் வைரஸ் ஜப்பான் நாட்டிலும் அடியெடுத்து வைத்துள்ளது.

கடந்த மாதம் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனாவான ஒமிக்ரான் வைரஸ், ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவுகின்றது. இந்த நிலையில், அந்த வைரஸ் ஜப்பான் நாட்டிலும் அடியெடுத்து வைத்துள்ளது.

நமீபியாவிலிருந்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜப்பானுக்கு வந்த, 30 வயதைக் கடந்த ஒரு பயணிக்கு, ஒமிக்ரான் வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதை ஜப்பான் தலைமை அமைச்சின் செயலாளர் ஹிரோகாஜு மாட்சுனோ உறுதி செய்தார்.

இதையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, வெளிநாட்டுப் பயணிகள் அனைவருக்கும் ஜப்பான் நேற்றுத் தடை விதித்துள்ளது.பிரான்ஸ் நாட்டின் ஒரு பகுதியான, இந்தியப் பெருங்கடல் தீவு ரீயூனியனிலும், ஒமிக்ரான் வைரஸ் தொற்று ஒருவருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

மொசாம்பிக் சென்று விட்டு, தென் ஆபிரிக்காவில் இறங்கிய பின்னர், தனது பயணத்தைத் தொடர்ந்த 53 வயது ஆணுக்கு, ஒமிக்ரான் வைரஸ் தொற்றுப் பாதித்துள்ளது.

## கொரோனாவால் அமெரிக்காவில் இதுவரை 8 இலட்சத்துக்கும் மேல் மரணம்

அமெரிக்காவில் அதிகரித்து வரும் கொரோனா தொற்றினால்,பாதிப்படைந்தோரின் மொத்த எண்ணிக்கை 4.93 கோடியைத் தாண்டியுள்ளது.உலகளவில் கொரோனா வைரஸினால், பாதிப்பு மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கையில், அமெரிக்கா தொடர்ந்தும், முதலிடத்திலேயே உள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிப்படைந்தோரின் எண்ணிக்கை 4.93 கோடியைக் கடந்துள்ளது. கொரோனா வைரஸினால் அங்கு உயிரிழந்தோரின் எண்ணிக்கை 8 லட்சத்தையும் தாண்டியுள்ளது.

அதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை 3.90 கோடியையும் தாண்டியுள்ளது. அமெரிக்காவிலுள்ள வைத்தியசாலைகளில், 94.74 லட்சத்திற்கும் அதிகமானோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## அர்வென் புயலினால் கடற்கரையில் ஒதுங்கிய நட்சத்திர மீன்கள்



பிரித்தானியாவில் அர்வென் புயலுக்கு பின்னர், கடற்கரையில் நூற்றுக்கணக்கான நட்சத்திர மீன்களும் ஏனைய கடல்வாழ் உயிரினங்களும் கரையொதுங்கியுள்ளன.

இந்தக் காட்சியை இன்வர்னெஸைச் சேர்ந்த, சார்லீ மக்ஜெவ்ஸ்கி, நைர்ன் அருகே உள்ள குல்பின் சண்ட்ஸ் என்ற கடற்கரையில், கண்டார். மொராய் ஃபேர்த் கடற்கரையோரத்தில் 100 மீட்டர் (328 அடி) நீளத்திற்கு நத்தைகளும், நண்டுகளும் கிடந்ததாக அவர் கூறுகின்றார். இது போன்ற சம்பவங்களுக்கு பொதுவான காரணம், கடுமையான வானிலையே காரணமென, கடல் பாதுகாப்பு அமைப்பு கூறுகின்றது.

இந்த உயிரினங்களில் ஏதேனும் உயிர் பிழைத்தனவா என்பது தெளிவாகவில்லை.

2018ஆம் ஆண்டு, எம்மா புயலின்போது ஏற்பட்ட கடுமையான காற்று மற்றும் பெரிய அலைகள் காரணமாக, மேற்கு நார்ஃபோக்கிலுள்ள கடற்கரைகளில், பல மைல்களுக்கு நூற்றுக்கணக்கான நட்சத்திர மீன்களும், நண்டு வகை மீன்களும், இறந்து கிடந்தன.

2017 ஆம் ஆண்டு, மொராய் ஃபேர்த்தியின் ப்ளாக் ஜல் என்ற பகுதியிலுள்ள கடற்கரையில், நூற்றுக்கணக்கான நட்சத்திர மீன்கள் பல வாரங்களாக கரையொதுங்கியிருந்தன. இது ஸ்டார்பாலிங் என்ற அந்த உயிரினத்திற்கே, உரிய ஒரு பழக்கமென அறியப்பட்டது.

ரோஸ்மார்க்கில் (Rose-markie) காணப்பட்ட உயிரினங்கள் பலவும், அதற்கு அடுத்தடுத்த நாட்களில், மீண்டும் கடலுக்கே சென்றுவிட்டதாகக் கருதப்பட்டது. நட்சத்திரமீன்கள் முந்தைய வருடத்தில் வசிக்கும் இடத்திலிருந்து இடம் மாறும் நிகழ்வே ஸ்டார்பாலிங் என ஃப்ளேமௌத் பல்கலைக்கழக, கடல்சார் கல்வி நிலையத்தின், வல்லுநர்கள் குறிப்பிடுக்கின்றனர்.

பிரிட்டனின் கடலோரப் பகுதிகளை, கடந்த வெள்ளிக்கிழமை அர்வென் புயல் தாக்கியது. மேலும், ஸ்கொட்லாந்தின் கிழக்கு கடற்கரையில் பலத்த காற்று வீசியதனால், பாதிக்கப்பட்டது.

புயலுக்கு பின்னர், ஸ்கொட்லாந்து எல்லைகளிலுள்ள இயற்கை காப்பகத்தில் நூற்றுக்கணக்கான கடல் நாய் குட்டிகள், இறந்து கிடந்தன. இதற்கு முன்னர், இந்த அளவிற்கு சேதங்களைப் பார்த்ததில்லையென, செயண்ட் அப்ஷெஸ் ஹெறட்டிலிருந்து செயற்படும் ஸ்கொட்லாந்தின் தேசிய அறக்கட்டளை கூறியுள்ளது.

## தீவிரம் பெறும் கொரோனாவினால் மீண்டும் கட்டாயமாகும் முகக் கவசம்



ஒமிக்ரான் வைரஸ் தீவிரம் பெற்றுள்ள நிலையில், இங்கிலாந்தில் கடைகளிலும், பஸ், ரயில், மெட்ரோ ரயில், விமானங்கள் போன்ற பொதுப் போக்குவரத்து சாதனங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

உலகை அச்சுறுத்தி வரும் உருமாறிய கொரோனாவான ஒமிக்ரான் வைரஸ், இங்கிலாந்தில் தீவிரமாகப் பரவ ஆரம்பித்துள்ளது. அங்கு இதுவரை 14 பேருக்கு இந்த வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு கடைகளிலும், பஸ், ரெயில், மெட்ரோ ரெயில், விமானங்கள் போன்ற பொதுப் போக்குவரத்து சாதனங்களில் முகக்கவசம் அணிவதை அந்நாட்டு அரசாங்கம் கட்டாயமாக நடைமுறைப்படுத்தியுள்ளது.

இது குறித்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் கூறும்போது, இப்போது நடைமுறைக்கு வரும் கட்டுப்பாடுகள் பொறுப்பானவை. புதிய வைரஸை எதிர்கொள்வதற்கு அவகாசம் தரும். நமக்குத் தெரிந்தவரையில், நமது தடுப்பூசிகளும், பூஸ்டர் டோஸ்களும் நமக்கு சிறந்த தற்காப்பாக அமையும்.

எனவே, தகுதி வாய்ந்த அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவை புதிய வைரஸ் பரவலை மந்தமாக்குவதுடன், நம் ஒவ்வொருவரையும், பாதுகாக்குமெனவும்,தெரிவித்துள்ளார்.

## 22 மணிநேரம் கடலில் தத்தளித்து உயிர்தப்பிய அதிசய மனிதர்



ஜப்பானில் நடுக்கடலில் படகு மூழ்கத் தொடங்கியதனால் படகின் இயந்திரப் பகுதியை பிடித்துக்கொண்டு உயிர் தப்பிய அதிசய மனிதர், பத்திரமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஜப்பானைச் சேர்ந்த 69 வயதான முதியவர் சுமார் 22 மணித்தியாலம் கடலில் அலைந்து தத்தளித்துக் கொண்டிருந்துள்ளார். ஆனால், அதிர்ஷ்டவசமாக அவர் பத்திரமாக மீட்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குறித்த நபர் கடந்த சனிக்கிழமை ஜப்பானின் தென் மேற்கு ககோஷிமாவிலிருந்து யகுஷிமா தீவிற்குப் பயணித்துக்கொண்டிருந்த போது, இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது.

உடனடியாக அந்த நபர் அந்தத் தீவிலிருந்த அவருடைய நண்பருக்கு தகவல் தெரிவித்துள்ளார். பின்னர் தகவலறிந்து மீட்புப்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். கிட்டத்தட்ட ஒருநாள் வரை தேடியும், அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், இறுதியில் அவரைக் கண்டு பிடித்து பத்திரமாக கரை சேர்த்துள்ளனர். அவர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த போதும், பிளாஸ்டிக் பையினால் தன் உடலைச் சுற்றிக்கொண்டு அதன்மூலம் உடலுக்கு தேவையான வெப்பத்தை கொடுத்துள்ளார். இதனால், அவர் உயிர் தப்பியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நடுக்கடலில் படகு மூழ்க ஆரம்பித்ததும், படகின் இயந்திரப் பகுதியை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, உயிருக்குப் போராடி உயிர் தப்பியுள்ளார்

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.